திராவிடநாடு

30—6—57 | வார வெளியீடு | விலை 0—2—6

காங்கிரஸ் சமதர்மம்!



வைரம்

M. S. வெங்கடாசலம் M.A.

நவரத்தினங்களில் ஒன்ருன வைரத்தின் வரலாறு சுவையிக்கது. ஒளிவீசும் தன்மை வைரத்துககு உணடு—கூழாங்கல்லுக்கு இல்லை! அவ்வள்வுதான் இரண்டுக்கும் உள்ள வேற்றுமை!! என்ருலும் வைரத்தின் விலையோ ஏராளம்! சீமாட்டிகளின் கழுத்தையும் கரத்தினையும் அலங்கரிக்கும் போது அடடா, எப்படியாகிவிடுகிறது? எப்படி வந்தது இதற்கு இவ்வளவு மதிப்பு?

வைரம் மக்களைக் கவர்வது அதன் அழகிஞல் — ஒளிரும் தன்மையிஞல்! ஆஞல் பல நூற்ருண்டுகளுக்கு முன்போ அப்படியல்ல. வைரம் அணிந்தவர்களெல்லாம் வைரம் போன்ற நெஞ்சினராய்—வீரத்தின் புகலிடமாய் —விளங்குவர் என்ருெரு கருத்து நிலவியது! 'தீய தெய்வங்'களிடமிருந்து மனிதனைக் காப்பதற்கான தாயத்தாகக்கூட அது கருதப்பட்டது! அது மட்டுமல்ல! வைரம் இருக்கும் வீட்டில் உற்சாகம் ஒளிரும்—வாழ்க்கை வண்ணச் சோலையென மிளிரும—கணவன் மனைவியரிடையே கரை காணவொண்ணுக் காதல் ததும்பும்—என்று இப்போதுகூட இங்கே எண்ணுகிருர்கள்!!

இவை போன்று வைரத்துக்கு மகத்துவம் ஊட்டிய மூட நம்பிக்கைகள் ஏராளம்! அதன் மதிப்பு உயர்ந்ததும் இபபடிக் கற்பிக்கப்பட்ட மகத்துவங்களிஞல்தான்!

வைரத்திற்குப் பட்டை தீட்டும் தொழில், கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோனியாவில் இருந்து வந்தது. என்ருலும் வைரததின் தனமைகளை யெல்லாம் முதன் முதலில் உணர்ந்தவர்கள் கிரேக்கர்கள். வைரத்திற்கு அவர்கள் வைத்த பெயர் அடமாஸ் —உடைக்கபபட முடியாத பொருள—என்பது.

என்ருலும் வைரக்கனிகள் முதலில் கண்டு பிடிக்கப்பட்டது இந்தியத் துணைககண்டத்தில்தான்! கோல்கொண்டா என்னுமிடத்திலுள்ள சுரங்கத்தில் அருமையான வைரக்கட்டிகள் எடுக்கப்பட்டன. ஆஞல் வைரம் கிடைக்கும் நாடுகளில் இன்று முன்னணியில் நிற்பது தென் ஆப்பிரிகா!

டேனியல் ஜேகப் என்ருெரு விவசாயி; ஏழை அவன். அவன் கரத்தில் 1867ல் விநோதமான கல் ஒன்று கிடைத்தது. ஆஞல் அந்தக்கல் வீசிய ஒளி அவனுக்கு ஆச்சரியத்தையும அளவு கடந்த மகிழ்ச்சியினையும் ஊட்டியது. என்ருலும அதன் மதிப்பு அவனுக்குத் தெரியாது! அந்தக் கல்தான் தென் ஆபபிரிகா நாட்டின் அஸ்திவாரக் கல் எனபதை எப்படியறிவான் அவன்?

ஜேகபபுக்கு அண்டை வீட்டுக்கார ஒருவன்—நீகர்க் என்று பெயர்—அவன இந்தக் 'கல்'லை விலை கொடுத்து வாங்க முறபட்டான். ஜேகப் அவனை ஏளனம் செய்தான—பாவம் ஏமாளி என்று எண்ணி பரிதாபப்பட்டான்!

பல கரங்கள் மாறி அந்தக் 'கல்' ஹோப்டவுனில் உள்ள யூதர்களிடம் போயச் சேர்ந்தது. பிறகு ஒரு பெரிய அதிகாரியிடம் அது விற்கப்பட்டது. கடைசியாக ஆதர்ஸ் டோன் என்ருெரு உலோக ஆராய்ச்சி நிபுணரிடம் கிடைத்தது. அது கல் அல்ல—வைரம் —அதன் மதிபபு ஆருயிரம் ரூபாயகளுக்கு மேல் ஆகும்— என்று அவர்தான் கண்டு பிடித்தார்!

இந்தச்செய்தி விவசாயிகளுக்கு எட்டியது. அவர்கள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர்! செல்வம் கிடைப்பதறகான குறுக்கு வழி என்று கருதினர் வைரம் தேடுதலை! எனவே தங்கள் நிலத்தையெல்லாம் விற்றுவிட்டு வால்நதிக் கரையை அடைந்து வைரம தேடும் தொழிலில் ஈடுபட்டனர் உழவர்களில் பெரும்பாலோர்! அந்த ஒரு இடத்தில்தான் வைரம கிடைககுமென்று கருதப்பட்டது அவர்களால்! நிலத்தை விற்றுவிட்டு நதிக்கரையைத் தேடிப் புறப்பட்ட அவர்கள் பட்டினியால் வாட வேண்டியிருந்தது. தோல்வியே அவர்களில் பெரும்பாலோரது முயறசியின பலன — தரித்திரம் அவர்கள் பெற்ற பரிசு!

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆரஞ்சு நதிக்கு அருகில் மற்ருெரு வைரம் கண்டெடுக்கப்பட்டது. இப்போது கிடைத்ததோ, மாடு மேய்க்கும் ஒரு சிறுவன் கரத்தில். அவன் வால் நதிக் கரையில் கிடைத்த 'கல்'.லின் கதையை மறக்கவில்லை. எனவே நீகர்க்—முன்பு ஜேகப்பிடம் வைரத்தை வாங்கியவன்— அவனை எளிதில் ஏமாற்ற முடியவில்லை. அவன் தருவதாகச் சொன்ன விலை என்ன தெரியுமா? 500-ஆடுகள் — 10-எருதுகள — ஒரு குதிரை இவை அத்தனையும். ஏழைக்கு இது மாபெரும செல்வம்தான; என்ருலும் அந்தச் சிறுவனுக்கு இது சிறிய தொகையாகத தோனறியது. கடைசியில், 83-காரட் எடையுள்ள அந்த வைரம் 1,46,678-ரூபாய்க்கு விற்கபபட்டது அவஞல்! எங்கும தேடாமல்—எவ்வளவும உழைக்காமல்—அந்தச் சிறுவனுக்குக் கிடைத்த மாபெரும் செல்வம "தென் ஆப்பிரிகாவின் விண் மீன்" என்னும பெயரை அவனுக்கு ஈட்டித் தந்தது!

மற்ருெரு வைரக்கல் ஜேகர்பான்டன் என்ற இடத்தில் கிடைத்தது. கண்டெடுததவள ஒரு விதவை. அவள அதை 26,000 ரூபாய்க்கு விற்ருள. அதன் பயஞக உலகப் புகழ்பெற்ற ஜேகர்பான்டின் வைரச் சுரங்கம் தோன்றியது.

கிம்பர்லி சுரங்கமும் விரைவிலேயே தோன்றியது. அங்கும முதலில் வைரத்தைக கண்டெடுத்தவன ஒரு ஏழைதான். சுரங்கம் தோனறிய சில நாட்களுக்கெல்லாம் சுற்றுப்புறத்திலிருந்த நிலத்தின் மதிப்பு மிக மிக உயர்ந்தது! பார்னடோ என்னும ஆங்கிலேயன் இந்தச் சுரங்கத்தினமூலம் ஏராளமான பொருள சம்பாதித்தான.

தென் ஆப்பிரிக்கா எங்கும் வைரம் என்ற பேச்சே அடிபட்ட சமயத்தில் வைரத்திற்குப் போலிகள் பல தோனறின. வைரம் போலத்தோனறும் கற்கள்கூட மிக உயர்ந்த விலைக்கு விற்கப்பட்டன பலரால்.

★

நல்ல தீர்ப்பு

[5] ஆண்டு சந்தா ரூ. 8 [30 6—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 50

தேசம்! தியாகம்!! சேவை!!! என்று அற்றை நாள் காங்கிரசார் வீரமுழக்கமிட்டு, வெஞ்சிறையும் தடியடியும் துப்பாக்கிக் குண்டுகளும் ஏந்தித் துடிதுடித்த நாட்களில், துளியும் கவலைப்படாது, ஜாம்ஷெட்பூரிலுள்ள எமது எஃகு ஆலை வடிக்கும் இரும்பினைவிடக் கடியதாகும் எமது மனம் என்று எடுத்துக் காட்டுவதுபோல, சுந்தரமான மாளிகையிலே, பன்னீரும் அத்தரும் பரிமளிக்க, பருகுவீர் பழரசம் என்று வெள்ளைக் கூட்டத்தினருக்கு விருந்தளித்து வெண்சாமரம் வீசியோரைச் சேர்ந்த டாடா கம்பெனியார், 'தீனபந்து' ஆகியிருக்கிறார்கள் எனும் திருச்சேதி, பம்பாய் உயர் நீதி மன்றம் வாயிலாக, இந்தக் கிழமை நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது! 'சர்'ருக்கும் திவான்பகதூருக்கும் அல்லாடி, வெள்ளையருக்கு வால் பிடிப்பதே வாழ்க்கையின் இலட்சியம் எனக் கொண்டோரெல்லாம், தியாகம் பல செய்தவர்கள் தேம்பி நிற்க, இன்று காங்கிரசுக்குள் புகுந்து, பதவிப் பட்டாடையும், பகட்டு ராஜ நடையும் போடுகின்றனர் — காரணம், காங்கிரஸ், ஆளும் கட்சியாகிவிட்டது; சிறு மீன் போட்டு பெருமீன் பிடிக்க இந்திய முதலாளித்துவம் முயலுகிறது —முதலாளித்துவமே, இப்படித்தான் செய்யும். மயில் கழுத்தை நம்பிடினும் மாடி வீடுகளின் மனதை நம்ப இயலாது—பணமோகினி அது! — என்று நாம் கூறிடும் போதெல்லாம், கொவ்வைப் பழம்போலச் சிவந்த கண்களைக் காட்டி, சினந்தனரே காங்கிரஸ் தோழர்கள், அவர் தம் மூடிய மனம் திறக்கவும், உண்மை வெளிப்படவுமான வகையில், ஒரு வழக்கு நடந்து, இப்போது இச்சேதி கிடைக்கிறது உலகுக்கு!!

சின்னாட்களுக்கு முன் டில்லிப் பார்லிமென்ற மன்றத்திலே, திருப்பணித் தூதராம் நேருவை நோக்கி, வினவொன்று விடுத்தார், ஒருறுப்பினர் — கடந்த தேர்தலிலே அகில இந்தியக் காங்கிரசுக்கு டாடா கம்பெனியார் பல லட்ச ரூபாய்களை அள்ளி வழங்கினராமே, அது உண்மையா? —என்பதாக. தக்க பதில் தரவில்லை, நேரு! இதோ, தகவல் வருகிறது, இப்படி. அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவும் வகையில் தமது கம்பெனி விதிகளையே திருத்திக் கொள்ள விரும்பினராம் டாடாகம்பெனியினர்—அதனால் வழக்கு மலர்ந்தது—உண்மை வெளியாகியுள்ளது!!

பணம் பெருக்கோரின் 'கருணை'க்கு ஆட்படும் குணம் பிறந்தால், அக்கட்சி அவர்தம் எடுபிடியாகியே தீர வேண்டும்—அதிலும் ஆளும் கட்சி, இத்தகைய செயலில் ஈடுபட்டால், நாட்டைச் சுரண்டிக் கொழுப்போரின், சூது யந்திரம் வளரவே வழி வகுக்கும்—இன்று, இந்த நிலை காங்கிரசில் ஏற்பட்டுவிட்டது — அதனாலேயே, அக்கட்சியால், சுதந்திரப்போராட்டத்தின்போது தந்த உறுதி மொழிகளை நிறைவேற்ற இயலவில்லை—'கருணை' காட்டுவோர் என்ன நினைப்பார்களோ என்கிற அச்சத்துக்கு ஆளாகிவிடுகின்றனர்—அதனாலேயே சோஷியலிசம்தான் தேவை என்று துணிந்து சொல்லவும் இயலுவதில்லை; முதலாளித்துவத்தை ஏற்றுக்கொண்டால் 'ஓட்' வைத்திருக்கும் மக்கள் வேட்டு வைத்துவிடுவார்கள் என்கிற பயம் குழப்புகிறது; இரண்டுக்கும் இடையில், இருதரப்பினரையும்சாந்தப்படுத்த 'மாடல் சோஷியலிசம்' என்று மயிலாட்டம் போடுகிறார்கள்—என்பதாக, எத்தனையோ நாளாக எடுத்துக் காட்டி வருகிறோம்!!

வழக்கின் விளைவால், காங்கிரஸ் கட்சி, இப்படி பணம் படைத்தோரின் கருணைக்கு கட்டுப்பட வேண்டிய நிலையிலிருக்கிறது, என்பது தெளிவாகிவிட்டது. வழக்கினை விசாரித்த, பம்பாய் உயர் நீதி மன்றத்தினர், தமது தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிடுகின்றனர்;—

ஆட்சி பீடத்திலிருக்கும் காங்கிரஸ் சர்க்கார் நீடித்தால்தான் தங்கள் தொழில் விஸ்தரிப்பு, லாபம் பாதுகாப்பு இவை கிடைக்கும் என்று கம்பெனி கருதுகிறது. ஆகவே காங்கிரஸ் சர்க்கார் நீடித்து பதவியிலிருக்க வேண்டும் என்று கம்பெனி கருதுகிறது. இதனால் தான் அரசியல் கட்சி நிதிக்கு நன்கொடை அளிக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

பணதிபதிகளின், நோக்கம் என்னவென்பதை, நாமல்ல, நீதிமன்றம் எடுத்துக் கூறுகிறது. டாடா கம்பெனியார், காங்கிரஸ் ஆட்சி நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்! ஏனெனில், இந்த ஆட்சி இருந்தால்தான் தமது தொழிலை விஸ்தரித்துக்கொள்ள முடியும், லாபம் பெறமுடியும், பாதுகாப்புடன் வாழ முடியும் என்று நம்புகிறார்கள்!!

எப்படி கதை? புலியென்பார், முதலாளித்துவத்தை! கொழுத்த அலையும் அப்புலிகளை அடக்கி, பசுக்களுக்கு வாழ்வளிக்கவே, நேருபிரானின் ஆட்சி நடப்பதென்பருளர்—அவர்தம் கண்களைத் திறக்கிறது, நீதிமன்றம்!!

அமெரிக்காவுடன் ஒப்பந்தம் பேசி 50-கோடி ரூபாய் மூலதனம் கொண்டு வந்தது டாடா கம்பெனி, ஈராண்டுகளுக்கு முன்பு—அதன் வசமிருந்த ஆகாய விமான 'சர்வீசை' நல்ல விலைக்கு இந்திய அரசினருக்கு விற்றது—இதுபோல, பலன்களையும், பாதுகாப்பையும் நிரந்தரமாக அனுபவிக்க, காங்கிரசுக்கு உதவத் தயாராயிருக்கிறது, மென்மேலும். கிடைக்கும் பல கோடிகளில் தனது லாபம், பாதுகாப்பு அதிகரிக்க, ஒரு சில லட்சங்களைக் காணிக்கையாக்கத் தயாராகயிருக்கிறது, காங்கிரசுக்கு.

பியூன் 'நாலணா' வாங்கிவிட்டால் லஞ்சம் என்கிறோம் — ஆளும் கட்சி, இப்படி வாங்குவதற்கு, என்ன பொருள் அரசியல் அகராதியில்? ஆட்சியாளரின் சலுகை பெறுபவர்களாயிருந்தால், அவர்கள் எம். எல்.ஏ.க்களாகவோ, எம். பி.க்களாகவோ வர இயலாது; ஏனெனில், தம் பதவியைக் கொண்டு அரசியல் சலுகையைப் பெற முனைவர் என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது, அரசியலமைப்பில். ஆனால், பணத்தைக்கொண்டு ஆளும் கட்சியினையே, விலைக்கு வாங்க முனைகின்றனரே, நன்கொடை—நிதி என்கிற பெயர்களால். இதற்கு என்ன சொல்லுவர், நலம் விரும்பிகள்!!

"இந்நாட்டில் ஜனநாயகம்குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. இது பூர்ண வளர்ச்சி அடையப் பாதுகாக்க வேண்டும். ஆகவே, ஜனநாயகத்தை கொலை செய்யும் எந்த யோசனையையும் மிகுந்த தயக்கத்துடனும், சந்தேகத்துடனும் கவனிக்க வேண்டும். ஒரு முடிவுக்கு வருவதில் பணம் பெரும் பங்குவகிக்குமாதலால் தராதரத்திற்கு ஏற்ப ஜனநாயகத்திற்கு தீங்குவிளையும். இதனால் ஜனநாயகத்தின் சொரூபம் மாருமலிருக்கலாம். ஆனால் இலட்சியம் மறைந்துவிடும். மற்ற நாடுகளின் ஜனநாயக சரித்திரம் இதை நிரூபித்துவிட்டது. பணமூட்டைகளினால் ஜனநாயகம் அழிக்கப்பட்டுவிட்டது. லஞ்ச ஊழலுக்கு பணத்திற்குள்ள செல்வாக்கை அனுமதிக்கலாகாது, இதைக் கடுமையாக ஒடுக்க வேண்டும்."

உயர் நீதிமன்றம், இவ்விதம் கூறுகிறது! இத்தீர்ப்பு, ஒரு பொன்னேடு, எனலாம்! இப்போதுள்ள சட்டத்தில் இதைத் தடுக்க வசதியில்லாததால், இதற்கான வகையில் பார்லிமெண்டு சட்டம் இயற்ற வேண்டும் என்கிற அறிவுரையோடு அவர்கள் தீர்ப்பு முடிகிறது.

"ஜனநாயகம் பரீட்சை செய்து பார்க்கப்படுகிறதுஇந்தியாவில்"என்று டென்மார்க் பிரமுகர் கூற, "தவறு! தவறு! ஜனநாயக ஆட்சிதான் நடக்கிறது" என்று இந்தியப் பிரதமர் நேரு, திருத்தம்கூறி, பெருமைப் பட்டுக் கொண்டாராம். ஆனால் அந்த ஜனநாயகத்தையே அழித்தொழித்து, ஒரே கட்சி ஆட்சியை நிரந்தரமாக்கிட, இங்கே பணமூட்டைகள் துடிக்கிறார்கள்—பணமும் கொட்டித் தருகிறார்கள்—எல்லாவற்றிற்கும் மேலாக, காங்கிரஸ் கட்சி தமக்குப் பாதுகாவலனாக விளங்கும் என்று நம்புகிறார்கள். அந்த உண்மை, இதோ வெளியாகிவிட்டது! இனிமேலாவது, என்ன செய்வர் காங்கிரஸ் தலைவர்கள்? எச்சரிக்கிறது உயர் நீதிமன்றம் — அதன் மூலம், காங்கிரஸ் கட்சியைப் பணம் படைத்தோர் எடுபிடியாக்கி வருகின்றனர் என்று நாம் கூறிவரும் உரைக்கும் வலிவேற்றுகிறது—இது, ஊறுபயக்கும் என்று உணர்த்துகிறது, நீதியகம். உண்மை வெட்ட வெளிச்சமாகிவிட்ட பிறகாவது, காங்கிரஸ் புரியினர் மக்கள் நலனையும், உண்மைத் தியாகிகளின் திருச்சேவையையும் மதித்து, முதலாளித்துவம் அகற்றப்பட, முழு ஒத்துழைப்பும் தருவார்களா—அல்லது இந்த எச்சரிக்கையையும், 'ஆயிரத்தில் இது ஒன்று' என்று கருதி, நாட்களை நகர்த்தப்போகின்றனரா—என்பதை நாடு கூர்ந்து கவனிக்க வேண்டும்.

★

ஊர்வலம்

—[ஞானக்கண்]—

கடையிலோ ஒழுங்கான காகிதம் கிடைப்பதில்லை பத்திரிகைக்கு. இடையில் நானும் இந்த 'இன்புளுயன்சா'வில் சிக்கிக் கொண்டேன். இந்த எரிச்சலில் என்னைப் பார்க்காததுபோலிருந்தார் ஆசிரியர்!

"சரி! பார்க்கும் வரையில் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன்..., என்று கூறியபடியே உட்காரலானேன்.

"சரி, சரி! சுந்தரலிங்கம் கதையாகி விடப் போகிறது......எங்கேயாவது போய்வா......",என்றார் ஆசிரியர்.

"அதென்னங்க சுந்தரலிங்கம் கதை?", என்றேன்.

"பத்திரிகைகூட படிப்பது கிடையாதா? இந்தா...பார்...", என்றார்.

கொழும்பு—என்கிற வார்த்தை கண்களில் பட்டதும் நேரே கிளம்பிவிட்டேன் கொழும்புக்கு? சுந்தரலிங்கம் என்பவர் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஏற்கனவே வர்த்தகமந்திரியாக இலங்கையில் இருந்தவர்!! அவர், பட்டப்பகலில் ஒரு வீதியின் நடுவில் உட்கார்ந்திருந்தார்...இரண்டு பக்கங்களிலும் ஒரே கூட்டம்...கார்களும் வண்டிகளும் போக முடியவில்லை...நடுவில் அவர் உட்கார்ந்திருந்தார்.

"ஏன்! இப்படி...?", என்று ஒருவரைக் கேட்டேன்.

"உனக்குத் தெரியாதா! பார்லிமெண்டில் தமிழர்கள் துவக்கவிருக்கும் அறப்போர் சம்பந்தமாகப்பேச இரண்டு மணி நேரம் வேண்டுமெனக் கேட்டார்...சபாநாயகர், சபை முடியப் போகிறது என்று சொல்லி மறுத்தார்... இவர் மீண்டும் வலியுறுத்தவே சபையை விட்டு வெளியேறும்படிச் சொன்னார்...இவர் மறுத்தார். கடைசியில் போலீசார் வந்து நாற்காலியோடு தூக்கி வெளியே கொண்டு வந்தனர்... வெளியில் வந்ததும் தன்னை சபைக்குள் விடும் வரையில் வெளியே உட்கார்ந்திருக்கப்போவதாகக்கூறி விட்டு அங்கேயே உட்கார்ந்து விட்டார். ஒரே கூட்டம் கூடி விட்டது..."

"...பிறகு அங்கேயிருக்காமல் ஏன் இங்கு நடு வீதியில் வந்து இருக்க வேண்டும்?"

"...கேளேன்! அங்கேயிருந்த வரை போலிசார் அப்புறப்படுத்தி ஸ்டேஷனுக்குக் கொண்டு போயினர்...பிறகு போகச் சொல்லினர்...'முடியாது. என்னை சபையில் கொண்டு போய் விடுங்கள்; என்று சொல்லி அங்கும் மறுத்தார்..."

"ரசமாயிருக்கிறதே. பிறகு?"

"...அவர் மன உறுதியைப்பார். ஸ்டேஷனில் வைத்திருந்தனர். இரவு ஒரு ஜீப்பில் ஏற்றி அவர் வீட்டருகே கொண்டு போய் விட்டனர்...விட்ட இடத்திலேயே நடு ரோட்டில் உட்கார்ந்து விட்டார்—எங்கிருந்து தன்னை போலீசார் வெளியேற்றினரோ அங்கேயே கொண்டுவிட வேண்டும் என்று உட்கார்ந்துவிட்டார்..."

"பிறகு?"

"கூட்டம் கூடி விட்டது...சிங்களம் மட்டுமே என்கிற சட்டம் வந்

(13-ம் பக்கம் பார்க்க)

'கனம்' இழந்த காங்கிரஸ் அன்பர் அளகேசன், காஞ்சிக்கடுத்த சிற்றூர் ஒன்றிலே நமது கழகத்தை, பரவி வரும் 'விஷக்காய்ச்சலுக்கு' ஒப்பிட்டுப் பேசினாராம்! 'இவரா, டில்லியின் மந்திரியாக இருந்தார்?' என்று மக்கள் கெக்கலிக்கும் அளவுக்கு, பேச்சு இருந்ததாம். அவரா, பேசுகிறார்! அல்ல ஆத்திரம்!! ஊனக்கண்கள் மட்டுமின்றி, உணர்வு தரும் இதயக் கண்ணும், காங்கிரசிலிருக்கும் கனதனவான்களுக்கு இருட்டு அடைந்து வரும் நேரம் இது. எனவே, ஏதாவது, நம்மைப் பற்றிப் பேசுகிறார்கள்! பேசாமலிருக்க முடியவில்லை, அவர்களால்! சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும், அதனால் தி. மு. க. மீது இன்னின்ன குறைகள் என்று எடுத்தோத இயலாது விஷக் காய்ச்சல்—காலராக் கிருமி என்று ஏதேதோ, கொட்டுகிறார்கள், இப்படிப் பேசிவிட்டால் கழகத்தைக் கண்டித்துவிட்டோம் என்றும் கருதுகிறார்கள். அளகேசன் போன்றாருக்கு ஆத்திரம் வருகிறதே என்று நமது கழகத்தவராவது சும்மாயிருக்கிறார்களா? ஊர்கள் தோறும் கிளைக் கழகங்களையும், நாளுக்கொரு கூட்டமும் நடத்திக்கொண்டேயிருக்கிறார்கள். சின்னஞ் சிறு ஊர், வாலாஜாபாத்! காஞ்சிக்கு அருகிலிருப்பது! அங்கே, நண்பர்கள் பலருண்டு, நமக்கு. ஆனால், கடந்தகிழமை அங்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டம் ஒன்றினையும் அதனை அவர்கள் நடத்திய விதத்தையும் கண்டபோது நமக்கே ஆச்சரியமாயிருந்தது. பஞ்சாயத்து போர்டில் வரவேற்பு! பூக்களால் கட்டப்பட்ட கார்! வர்ண வேடிக்கைகள்! ஊரெங்கும் தோரணங்கள்! வீடெல்லாம் விளக்குகள்! இவ்வளவு விமரிசையோடு பல்லாயிரக் கணக்கான மக்கள்!

"சாதாரணமாக நான் ஊர்வலங்களில் கலந்துகொள்வது கிடையாது. ஆனால் என்னைக் கட்டாயப்படுத்தி விட்டார்கள், நண்பர்கள். ஜோடிக்கப்பட்ட ரதத்தில் உட்கார்ந்திருந்த போது, எனக்கே வெட்கமாயிருந்தது. ஏனெனில் இதுபோல கலியாண மாப்பிள்ளை ஊர்வலங்கள்தான் செல்லும்! நான் அந்த வயதுடையவனல்ல. அறுபதாம் கலியாணத்துக்கு ஏற்ற வயோதிகனுமல்ல! இடையிலேயிருப்பவன். எனினும் என்னை சங்கடமான நிலையில்வைத்துவிட்டார்கள்" என்று கூட்டத்தில் கலந்துகொண்ட அண்ணா சொல்ல வேண்டிய அளவுக்கு, இருந்தது. அடிக்கடி நாங்கள் காணும்ஊர்! சென்னைக்கு செல்லவேண்டி இருந்தாலும், வெளியூருக்குப் போகவேண்டுமென்றாலும், வாலாஜாபாத்தைத் தாண்டித்தான் போகவேண்டும். அங்கே, இந்தளவுக்கு, கழகத்தின்பால் பற்றும், ஆர்வமும் தேங்கிக் கிடப்பது எங்களுக்கே தெரிய முடியவில்லை. அந்தளவுக்கு, ஆங்காங்கு, கழகத்தின்பால் ஆசையும் ஆர்வமும், புதையுண்டுகிடக்கும், தங்கம்போல, இருக்கிறது! சந்தர்ப்பம் வரும்போது, தோழர்கள், காட்டுகிறார்கள்!!

அண்ணல்

தேர்தல் காலத்திலும்தான் எத்தனையெத்தனை சிற்றூர்களில், எவ்வளவுவிதமான, ஆர்வத்தைக் கண்டோம்? இதையெல்லாம் காண நமக்கு களிப்பு வருகிறது! அளகேசர்களுக்கோ, எரிச்சல் குடைகிறது!!

அண்ணா குறிப்பிட்டார், வாலாஜாபாத் கூட்டத்தில் **"அர்த்த ராத்திரியில், ஆளரவம் அடங்கிய நேரத்தில், கன்னக்கோலேந்திக் கிளம்பிய கள்ளன் தான் திருடச் சென்ற வீட்டார் இன்னும் தூங்காது விழித்துக் கொண்டிருப்பதைக் கண்டால், "திருட்டுப்பசங்க! இன்னும் தூங்கலே" என்று கூறுவதைப்போலுள்ளது, அளகேசன் நம்மை, விஷக்காய்ச்சல்** எனக் கூறியது என்றார்!! உண்மை தானே, யார் விஷக்காய்ச்சல் என்பதனை மக்கள் அறிவார்கள்—எந்த விஷக்காய்ச்சலால் பத்து ஆண்டுகளாகியும் பாலாற்றில் தண்ணீரும் பரதவிக்கும் மக்களுக்கு நல்வாழ்வும் ஏற்பட முடியவில்லை என்பதை நாடு அறியும். இருந்தும், கள்ளன், காவலனையா 'திருடன்' என்பது!!

வேறு விபரங்களுக்குக் கூடப் பிறகு போகலாம்—நம்மை விஷக்காய்ச்சல் என்கிறாரே அளகேசன். அவரையும் நம்மையும் தாலாட்டிச் சீராட்டித் தகுதிகளையும் வழங்கும் தமிழன்னை இருக்கிறாளே. அவளுடைய இன்றைய நிலை என்ன? கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றி மூத்த மொழி—கற்றார்க்கும் மற்றார்க்கும் இனிமை தரும் மொழி என்கிறார்கள் புலவர்கள். சென்னையில் போலீஸ் கமிஷனராகயிருந்தாரே **பார்த்தசாரதி அய்யங்கார்** அவர், கடந்த கிழமை டில்லியிலேயிருக்கும் தமிழ்ச் சங்கத்தில் போய் முழக்குகிறார்— **திருக்குறள் ஒன்று இருந்துவிட்டால் ஒரு 'லைப்ரரி'கூடத் தேவையில்லை. ஆயிரக் கணக்கான நூல்களையெடுத்து நாம் படித்துக் கற்கவேண்டிய அவ்வளவு**

போதனைகளும் திருக்குறளில் இருக்கின்றன—என்று. அப்படிப்பட்ட திருக்குறளைப் பெற்றிருக்கிற தமிழுக்கு இன்றைய தினம் என்ன மதிப்பு தரப்பட்டு இருக்கிறது? இதோ, ஒரு செய்தி வருகிறது:—

கவிஞர்களின் நினைவாக ரஷ்யாவில், தபால் 'ஸ்டாம்புகள்' வெளியிட்டிருக்கிறார்களாம். எந்தக் கவிஞர்கள் தெரியுமா? இந்தியக் கவிஞர்கள்!

அவர்கள்பால் தமக்கு இருக்கும் மதிப்பைக் காட்டிக்கொள்வதற்காக, ரஷ்ய சர்க்கார் இந்த ஆண்டு தபால் தலைகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தத் தபால் தலைகளில் நமது திருவள்ளுவருக்கு இடமுண்டோ? வேண்டாம், கம்பருக்காவது, இடமுண்டோ!

கிடையாது — இந்தச் சேதியைக்கேள்விப்படுமபோது, நமக்கு எப்படியிருக்கும்? வாலாஜாபாத்தில் என்ன, சின்னஞ்சிறு குக்கிராமங்களிலிருக்கும் தமிழ் ஆர்வம் கொண்டவர்களின் மனம்தான் என்ன பாடுபடும்?

ரஷ்யர்களைக் குறைகூறுவதற்கில்லை! அவர்களுக்கு, கபீர்தாசையும் கவியரசர் தாகூரையும் பற்றி எடுத்துத் தெரிவித்த இந்திய ஆட்சி, வள்ளுவரையும், பாரதியையும் பற்றிக் கூறினால் தானே? எப்படிக் கூறும், டில்லி! இங்கே, என்ன மதிப்பளித்தது, நமது கவியரசுகளுக்கு?

டில்லி சர்க்காரும், இந்தியக் கவிஞர்களின் படங்களை, தபால் தலைகளில் போட்டு வெளியிட்டார்கள். அவை எதிலும், தமிழ் வளர்த்த புலவர்கள், இல்லை. அதைக் கண்டு நம் போன்றோரும் தமிழ்ப் புலவர்களும் சினம் கொண்டு, மடலும் வேண்டுகோளும் அனுப்பினர் டில்லிக்கு —என்ன கிடைத்தது? வழக்கம் போல் ஏமாற்றம்!

ஆல்பர்ட் ஸ்வைட்சர், எழுதுகிறார் குறளின் அருமைபற்றி— அய்யங்கார் டில்லியில் போய் முழக்குகிறார்— அளகேசனார் ஆட்சியில் தமிழுக்குக் கிடைத்ததென்ன.

கவிஞர்களை கவுரவிப்பதோடு இல்லை, ரஷ்யா. இந்தி மொழிக்கும் முடி சூட்டுகிறது! இதுவரை பிரெஞ்சு, ஸ்பெயின், ஜெர்மனி, ஆங்கிலம், ஆகிய நான்கு மொழிகளையும் ரஷ்யா முழுவதும் விருப்பபாடமாக வைத்திருந்தார்களாம். இனிமேல், இவைகளோடு கூட, இந்தியும் இருக்குமாம்! மாஸ்கோவிலும், லெனின் கிராடிலும் இந்தி பவனிவரப்போகிறது —அதுபோல, இன்மொழி, தென்மொழி, முத்தமிழைக் கொண்ட மொழி தமிழும் பவனிவர வேண்டும் என்கிற 'அல்ப ஆசை' வராதா நமக்கு? அதை எடுத்துச் சொன்னால், நாம் விஷக்காய்ச்சலா!

ஜனசக்தியும்!!

"...சேலம் இரும்புக்கு வாயிருந்தால் அழும். தமிழ்த்தாயின் மடியில் வந்து படுத்துக்கொள்ளாமல் சகாராப் பாலை நிலத்தில்போய், புதைந்து கிடந்தாலும்கூட இரும்பு பொன்னாகக் கருதப்படுகிற இந்த இயந்திர யுகத்தில் இதற்குமுன் தோண்டி எடுத்திருப்பார்கள். அதிர்ஷ்டம் கெட்ட கழிக்காணியான இந்த இரும்புச் செல்வம், காங்கிரஸ் ஆட்சியில், தமிழகத்தில் தனது முகத்தைக் காட்டி, சீந்துவாரற்ற பிணமும், கொட்டுவாரற்ற மேளமுமாக வரவேற்பின்றி பெருமை குன்றிச் சீரழிகிறது."

'ஜனசக்தி'
19-6-57

தபால் தந்தி மணியார்டர், சகலமும் இந்தியாகிவிட்டது— நாணயத்திலும் 'நயா'பைசா வந்துவிட்டது—இது, எவ்வளவு பெரிய விஷக்காய்ச்சல் தமிழ் மொழிக்கு? அதைக் கண்டிக்கும் நாமா, விஷக்காய்ச்சல்!

அதனால்தான் அண்ணா, அர்த்தராத்திரிக் கள்ளன், வீட்டிலிருப்பவர்களைப் பார்த்து 'திருட்டுப் பசங்க' என்று சொல்லும் உதாரணத்தைக் குறிப்பிட்டதும், மக்கள் கரமுழக்கி ஆமோதித்தனர்! உள்ளபடியே, தமிழுக்கும், தமிழர் தம் எதிர்காலத்துக்கும், அளகேசன் போன்றோரின் கட்சிதான் விஷக்காய்ச்சல்! இதில் கொஞ்சமும ஐயமில்லை!

தமிழ் நாட்டில் பிறந்த அளகேசன, தமிழைக்காக்க முனைவோரை விஷக்காய்ச்சல் என்று வெகுண்டு பேசுகிறாரல்லவா? இதோ கேளுங்கள், "அஸ்ஸாம் அப்சர்வர்" என்கிற ஏடு தெரிவிக்கும் சேதியை

பலத்த கண்டனம்
விடமுடியாது
அக்கிரமம்
நமக்குள்
பேதமூட்டும் முயற்சி

என்று அஸ்ஸாமில் கடந்த 9-ந் தேதி நாடு முழுவதும் கண்டனக் குரல் எழுப்பிருக்கிறார்கள், சாகித்ய சமிதி எனபோர். இதற்குத் தலைவர், இரகுராதசௌத்திரி எனும் கவிஞர்! ஏன் இந்தக கண்டனம் தெரியுமா? இந்தியை எதிர்த்துத் தான்!

இந்தி நுழைந்தால் எங்கள் புராதன மொழி பாழ்படும்; கூடாது.

என்று கூறுகிறார் அக்கவிஞர்! இந்த அளவுக்கு, அங்கே ஆர்வம் கொழுந்துவிட்டெரிகிறது. இக் கவிஞர் தனிநாடு கேட்பவரல்ல! எனினும் இந்தியை எதிர்க்கிறார். அளகேசனும் அவரது காங்கிரசும் என்ன செய்தது?

மொழித்துறையில் மட்டுமல்ல, நாட்டின் வளர்ச்சிக்குத்தான் என்ன செய்தது, இங்குள்ள தமிழ் நாடடுக் காங்கிரஸ்! பத்தாண்டுக் காலம், அரியாசனத்தில் அமர்ந்திருந்தார்கள்—அடிக்கடி டில்லிக்கும் போய்வரத் தவறவில்லை—அளகேசன் போன்றோர் அனுதினமும நேருவைத் தரிசிக்கும் நிலைமையும் இருந்தது—எனினும் தொழில் துறையில் கிடைத்தது என்ன! அணைக்கட்டுகள், ஆலைகள அமைப்பதில் பெற்ற லாபம் என்ன!!

இரும்பு இருக்கிறது சேலத்தில் அங்கே ஒரு உருக்கு ஆலை வேண்டும என்று இரண்டு மூன்று

ண்டுகளாகக் கேட்டு வரு ரும். ஏஸ். வி. ராமசாமி—சேலத் க் காங்கிரஸ் உறுப்பினர் ஒரு கூடப் பேசினார், இதுபற்றி. ன்ன நடந்தது? அஸ்ஸாமில், ண்ணெய் ஆலை இல்லை என்ற ம் அங்கேயுள்ள காங்கிரஸ் ரசு ராஜினாமா செய்கிறேன் ன்கிறது! அளகேசனின் காங் ரஸ் என்ன செய்தது—அவர் ா பக்தவத்சலம் செய்ததென்ன ண்டு பத்துகளாக அரியா னத்திலிருந்தனர்—ஒரு தடவை ரவது 'அஸ்ஸாம் தைரியம்' ற்பட்டதுண்டா!

அண்டையிலேயிருக்கும் நாடு' கரளம். டில்லியின் பிணைப்பு வண்டும் என்று கூறும் கம்யூ ரிஸ்டுக் கட்சிதான், ஆள்வது. அது தைரியமாக முன்வந்து இந்த கிழமை அறிவித்திருக் கிறது, தொழில் வளர்ச்சி சம்பந்த மான பல திட்டங்களைத் தாங்கள் நிறைவேற்றப் போவதாகவும் — இதற்காக ஒரு போர்டு ஒன்றை நிறுவி ஆவனச் செய்யபபோவ தாகவும்.

முதலமைச்சரின் இக்கூற்றைக் கேட்ட ஒரு உறுப்பினர், ஒவ் வொரு மாவட்டத்துக்கும் தொழிற்போர்டு அமைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார்! இப் படி அமைக்கப்பட்ட போர்டுகள் சரிவர இயங்க டில்லி வசதிகளைத் தருமா? — என்பது, வேறு பிரச்னை.

தருகிறதா, இல்லையா என்று சண்டையாவது போடலாமே! செய்ததுண்டா, அளகேசன் காங் கிரஸ்? அதற்குப்பதில் இது போன்ற நிலைமைகளை எடுத்து விளக்கும், நம்மீதுதான் பாயத் தெரிகிறது! நேருவுக்கு எதிரில் நல்ல பிள்ளைகளாகக் காட்டிக் கொண்டு, 'பதவிப்பிச்சை' வாங்கி அதோடு திருப்தி அடையும் சுபாவம் கொண்ட அளகேசன் போன்றோர், விஷக்காய்ச்சலா — நாட்டுக்குப் போராடும் நாமா!

அண்ணா, மேற்படி கூட்டத்தில் சொன்னார், "அப்படி விஷக்காய்ச் சல், உருவாக, உலவ என்ன காரணம்? குப்பை கூளங்களும், அழுக்கும் இருந் தால்தானே விஷக் கிருமிகள் உற்பத்தி யாக முடியும்? ஆண்டு பத்தாகியும், நாட்டிலுள்ள குப்பை கூளங்களை அகற்றி தூய்மைப்படுத்தியிருப்பது தானே—இருந்தால், எப்படி, நீ விஷக் காய்ச்சல் என்று கருதும் தி. மு. க. வளர முடியும்? உன்னால், நாட்டைச் சீர் படுத்த இயலவில்லை — மாறாகக் குட்டிச் சுவராக்கி வருகிறாய். அதைத் தடுக்க முனையும் எங்களை விஷக்காய்ச்சல் என் கிறாய்? உன் ஆட்சியில் ஒழுங்கீனங்கள் அகற்றப்பட்டிருந்தால், எப்படி எங்கள் குரல், மக்கள் மத்தியில் ஓங்கும்?"

இதற்கு, அளகேசன்கள் என்ன பதில் சொல்லுவர்! என்ன பதி லைச் சொல்லமுடியும்? ஆத்திரம் கொண்டு, ஏசுவர் பேசுவர்! அது முடியும்!!

ஏச்சும் பேச்சும், ஒரு தேசிய இயக்கத்துக்குக் கிடைக்கும் நல்ல எருவாகும். அதனால்தான், அள கேசர்கள், இப்படி ஏதாவது பேசும்போது மக்கள் கெக்கலிக் கிறார்கள்! மறுதினமே, அங்கே, ஒரு கழகம்—முளைக்கின்றது. மக் கள் மன்றத்துக்கும், எவரால் நன்மை மலரும், யார் தமிழ்ப் பண்பை வளர்க்கிறார்கள் என்பது விளங்குகிறது. இந்தப் பணி யினைத் தொடர்ந்து செய்வதே நம் கடமையாகும்! இப்படிச் செய் வதற்கான நிலையில், நாடு எவ் வளவு பக்குவமடைந்து வருகிறது என்பதையே சிற்றூர் வாலாஜாபாத் தெரிவித்தது! அதைக் கண்ட போது, எங்கெல்லாம் ஆதரவு திரள்கிறது என்கிற ஆனந்தமும், ஆதரவுதிரளும் இடங்களையெல் லாம் உருவாக்க வேண்டுமே என்கிற ஆர்வமும் உண்டாகிறது —அளகேசர்களுக்கு, அது, குடைகிறது.

★

நாள் எந்நாளோ?

[மா. சு. அண்ணாமலை]

தனித்தனியே வாழுகின்ற மக்கட் கூட்டம்
 தம்மொழியால் தம்மினத்தால் ஒன்றாய்க் கூடிக்
கனிவுடனே மகத்தான ஒருமை காண
 காண்கின்றார் பலசங்கம் கண்ட பின்னர்
தனிமனிதர் குறையெல்லாம் அவையிற் கொட்டித்
 தத்தமது வாதங்களைப் பெரிதாய்ப் பேசிச்
சினங்கொண்டே திரிகின்றார் மன்றம் போற்றி
 சீர்மையுடன் வாழ்கின்ற நாளெந் நாளோ?

ஒற்றுமையே பலமென்று உலகில் காட்ட
 உணர்வுள்ள பலபேர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து
நற்சங்கம் அமைக்கின்றார் அமைத்த பின்னர்
 நல்லவையுள் தீயவற்றைக் கலக்கக்கொட்டி
சிற்பத்தைச் செப்பனிடும் பணியை விட்டு
 செதுக்கியதை உடைத்தெறியும் செயலே போன்று
பற்பலரும் பண்பற்று பகைமையக் கொள்ளும்
 பழிநீக்கி சபைபோற்றும் நாளெந் நாளோ?

அவைதனுக்கு ஆகாத நிலைகள் போக்கி
 அவரவரும் தன்னலத்தை ஒதுக்கித் தள்ளிக்
கவைக்குதவாப் பேச்செல்லாம் மலைபோ லாக்கி
 கடும்பகைக்கு வழிகோலும் கொள்கை நீக்கி
சுவைமிக்க சொற்பேசி இனிதாய்க் கூடிச்
 சொல்வதுபோல் செயலாற்றித் தமிழர் வாழ்க்கை
உவப்புடனே உலகரங்கில் உயர்த்து கின்ற
 உத்தமர்கள் பெருகுகின்ற நாளெந் நாளோ?

பொய்யின் பெருமை!

[மா. கி. தசரதன்]

'பொய் சொல்லல் ஆகாது பாப்பா' என்று அழகாகப் பாட்டு இருக்கிறது. ஆனால், பொய் பேசாதவர்கள் என்று யாரையும் சொல்ல முடியாது. இன்னும் உண்மையைச் சொல்வதானால் நாம் பிறந்ததிலிருந்து சாகின்ற வரை நம்மோடு விடாமல் ஏதாவது ஒன்று ஒட்டிக் கொண்டே வருகின்றது என்றால் அது இந்தப் பொய் சொல்லும் கலைதான்.

ஆமாம்—கலை தான்! பொய் சொல்வதுகூட ஒரு கலையாகப் போய் விட்டதா என்று ஆச்சரியப்படவேண்டாம். கலைக்கு என்னென்ன பண்புகள் உண்டோ அவ்வளவும் இந்தப் பொய்யுக்கும் உண்டு. மெய்யைவிடப் பொய் தான் அதிக அழகாக இருக்கின்றது.

ஓங்கி வளர்ந்துள்ள தென்னையையும் அதன் உச்சியில் குலை குலையாகத் தொங்கும் இளநீர்க் காய்களையும் பார்க்கின்றோம். அதிலே நம்முடைய மனம் அதிகமாக ஈடுபடுவதில்லை. ஆனால், கைதேர்ந்த ஓவியன் ஒருவன் அந்தத் தென்னையையும் அதன் இனிய காய்களையும் அழகிய ஓவியமாக வடித்து விட்டாலோ அண்ணாந்துபார்த்துக் கொண்டே நிற்கின்றோம். அசலைவிட நகலுக்கு மதிப்பு அதிகம்!

அதே போலத்தான் மெய்யை விடப் பொய்யைக் கண்டு நாம் மெய்மறக்கின்றோம்—மேன்மை மேன்மை எனப் பாராட்டுகின்றோம்.

இவ்வளவு அழகும் ஈர்க்கும் ஆற்றலும் இந்தப் பொய்யுக்கு இருப்பதினால்தான் நாம் அதை நம்முடைய வாழ்க்கைத் துணையாகவே கொண்டிருக்கின்றோம்.

'மாடத்திலே வைத்தேனே மிட்டாய், பார்த்தாயா?' என்று கேட்கும் தாயாரிடத்தில் 'நான் பார்க்கவே இல்லையே அம்மா அந்த ஐந்து மிட்டாயை' என்று பொய் சொல்லுகின்றோம் சின்ன வயதில்.

பிறகு பள்ளிக்கூடம் போனதும் பொய் சொல்லக்கூடாது என்பதைப் பற்றி ஆசிரியரிடம் கதை கதையாகக் கேட்கின்றோம். அந்தக் கதையெல்லாம் முடிந்ததும் 'ஏய், மணி, எங்கேயடா வீட்டுக் கணக்கு?' என்று கேட்கிறார் அவர். சனி ஞாயிறு இரண்டுநாட்களிலும் ஊரைச் சுற்று சுற்று என்று சுற்றி விட்டுத் 'திங்கட்கிழமை வந்து தொலைத்ததே' என்று முணகிக் கொண்டே பள்ளிக்கூடம் வந்திருக்கின்றோம் நாம். வீட்டுக் கணக்கு கொடுத்ததே நினைவு இல்லை. என்றாலும் ஆசிரியர் கேட்டதும் 'இந்தப் பூனையும் பாலைக் குடித்திருக்குமா?' என்பது போல் முகத்தை வைத்துக் கொண்டு, வீட்டிலே வைத்து விட்டேன் நாளை கொண்டு வருவேன் ஐயா' என்று தயங்கித் தயங்கி ஆனால், உண்மை போலச் சொல்லுகின்றோம். அந்த அப்பாவி ஆசிரியரும் அதை நம்பி நம்மை விட்டுவிட்டு அடுத்தவனை விசாரிக்கின்றார்.

பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்ததும் நம்முடைய பெற்றோர்கள் 'ஆயிரம் பொய்யைச் சொல்லி' பெண் வீட்டாரை மயக்கி நமக்கு ஒரு கலியாணத்தைச் செய்து வைக்கின்றார்கள்.

இந்தப் பொய்ப்புராணம் இதோடாவது முடிகின்றதா என்றால்—அதுதான் இல்லை. அடுத்த வீட்டுக்காரரிடத்தில், அலுவலகத்தில் எங்கும் பொய் சொன்னால் தான் 'பிழைக்க' முடிகின்றது. சட்டைப்பையில் நூறு ரூபாய் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்காரர் கேட்டும்போது, 'ஐயோ—சற்று முன்னே கேட்கக் கூடாதா—கொடுத்து விட்டேனே அவரிடம் இப்போது காலணா கூட இல்லையே' என்று உண்மைபோல சொன்னால்தான் தப்ப முடிகின்றது.

'இன்று மாலை நான் நாடகத்திற்குப் போக வேண்டும் விடுமுறை தாருங்கள்' என்று கேட்டால் அலுவலகத்தில் நடக்குமா? 'ஐயா, என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால்—வைத்தியரைப்போய்க் காண இன்று முதல் இரண்டு நாட்களுக்கு விடுமுறை தர வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன' என்றால் திருமணம் ஆகாதவனுக்குக்கூட விடுமுறை கிடைக்கும்.

இதைப்போல் நம்முடைய வாழ்க்கையில் எங்கும் எதிலும் பொய் 'நீக்கமற நிறைந்திருக்கிறது' என்பதினால் யார் வேண்டுமானாலும் பொய் சொல்லிவிட முடியுமா என்றால்—அது அவ்வளவு எளிதல்ல! பொய் சொல்லத் தெரிய வேண்டும். இல்லாவிட்டால் குட்டு வெளிப்பட்டு விடும்—கெட்டிக்காரன் புளுகே எட்டு நாளில் தெரிந்து விடும் என்பார்கள.

பொய் சொல்லுவது என்பது சாதாரணமாக எல்லோருக்கும் வந்துவிடக்கூடிய திறமை அல்ல—யாரோ சிலர்தான் அந்தக்கலையில் வல்லவர்களாக இருப்பார்கள். அந்தத் திறமை இல்லாதவர்கள் 'ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்' சொல்லி விட்டுப் பிறகு 'ஆடு திருடிய கள்ளனைப் போல்' விழிப்பார்கள். அப்போது யாராவது பார்த்தால் 'பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்' என்று அறிவுரை வேறு சொல்ல வந்து விடுவார்கள்.

பொய்யே சொல்லக் கூடாதா என்றால் "சொல்லலாம் தாராளமாகச் சொல்லலாம்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இந்தத் திருவள்ளுவர் இருக்கிறாரே இவரைப் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. உலகமெல்லாம் சொல்வது ஒன்றாக இருக்கும் இவர் சொல்வது வேறாக இருக்கும். என்ன இப்படிச் சொல்லுகிறாரே என்று தயங்கினால் அதற்குக் காரணமும் சொல்லி விடுவார்.

பொய் சொல்லக் கூடாது என்றுதானே உலகமெல்லாம் சொல்லுகின்றது என்று அவரிடம் கேட்டால்—உலகம் என்ன நானே அதைத்தானே சொல்லி இருக்கிறேன்—பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை நன்று என்று சொல்லியிருக்கிறேனே என்கிறார்— "பின்னர் ஏன் பொய்

சொல்லலாம் தாராளமாகச் சொல்லலாம் என்கிறீர்களா?" என்று கேட்டால், "நான் என்ன சொல்லியிருக்கிறேன பொய்மையும் வாய்மையிடத்த என்றுசொன்னேன்—எபபோது புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்—குற்றமற்ற நன்மையைச் செய்யும்போதுதானே ஐயா பொய்யும் மெய்யைப் போன்றது என்று சொன்னேன்' என்று திருப்பிக் கேட்கிருர். "ஆமாம்" என்று மென்று விழுங்கிக் கொண்டே நாம் நகருகின்ருேம்!

'கொலேபாதகன் ஒருவன் கொடுவாளேத் தூக்கிக்கொண்டு துரத்தி வருகிருன் ஐயா—கொஞ்சம் இங்கு தங்கி மறைகின்றேன்' என்று இறைஞ்சுகின்ருன் ஒருவன்—சரி என்று அவனுக்குப் புகல் அளிக்கின்ருேம். அவனேத்துரத்தி வந்தவன் "இப்படி ஒருவன்—ஒல்லியாக உயரமாக இருப்பான் ஓடிவந்தானே பார்த்தீர்களா?" என்று நம்மிடமே கேட்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது உண்மையே பேச வேண்டும் என்று 'ஆமாம்-இதோ இந்த அறையில் இருக்கிருன்' என்று சொன்னுல் அது எவ்வளவு வேதனைதரும் நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகும். அனல் நெருக்கடியான அந்த நேரத்தில் 'ஒல்லியாக உயரமாகஒரு ஆளா—இந்தப் பக்கமா—நான் பார்க்கவில்லேயே—ஒரு வேளே அப்படிப் போயிருக்கலாம் அந்தப்பக்கம் பார்' என்று எதிர்த்திசையில் கையைக் காட்டினுல் அதனுல் எவ்வளவோ நன்மை—அதைத்தான் வள்ளுவர் 'புரைதீர்ந்த நன்மை' என்கிருர். நன்மை பயக்கும்போது—அதுவும் குற்றம் நீங்கிய நன்மை பயக்கும்போது பொய்மையும் வாய்மைபோல் தூய்மையானதாகிறது.

அப்படிப் புரைதீர்ந்த நன்மைக்காகச் சொல்லப்படும் பொய்யும் திறமையோடு சொல்லப்பட வேண்டும். திறமையில்லாது—பொருந்தாமல்-பொய் சொன்னுல் தான் அது உடனே வெளுத்துப் போவது.

திறமையாகப் பொய் சொல்லி ஒரு திருட்டைக் கண்டுபிடித்த கதை ஒன்று உண்டு. எங்கோ ஒரு ஊரில் யாரோ ஒருவன் சாம்பல் பூசணிக்காயைத் திருடி விட்டானும். ஐயப்படக்கூடியவர்களே எல்லாம் வரிசையாக நிற்க வைத்து, அந்த ஊர் நாட்டாண்மைக்காரர் 'ஏண்டா—திருடியது தான் திருடினுயே—தூக்கிக் கொண்டு வரும்போது காதோரத்தில் சாம்பல் பட்டிருக்கிறதே அதைக் கூடவா துடைக்கக் கூடாது? ஊம்!" என்ருராம்—மற்றவர்கள் சும்மா இருக்க திருடியவன்மட்டும்-காதோரத்தில் கையைவைத்துத் தேய்த்தானும்-உடனே திருட்டு துலங்கியது—என்பார்கள். இது அந்தக் காலத்தில் நடந்திருக்கலாம். இந்தக் காலத்தில் கடைத் தெருவில் திருடியவன்—அதோ திருடன் பிடி பிடி என்று இவனே ஓலமிட்டுக்கொண்டு ஓடுகின்ருன—மற்றவர்கள் இல்லாத இடத்தில் திருடனைப் பிடிக்க ஓடி அலுத்துப் போகிருர்கள்.

இப்படி இரண்டு பக்கமும் கூர் இருக்கும் கத்தியைப்போல இந்தப் பொய் நல்லவனுக்கும் பயன்படுகின்றது, நயவஞ்சகனுக்கும் பயன்படுகின்றது.

இந்தப் பொய் எல்லாம் ஒரு பக்கம் கிடக்கட்டும். மதவாதிகள் சொன்னுர்களே ஒரு மாபெரும் பொய் அதை என்ன என்பது—கல்லுப்போல் இருக்கும் இந்த உலகத்தையும் இதிலே நடமாடும் உயிரினங்களேயும்—அவற்றின் மனதிலே குதித்தோடும் எண்ணங்களேயும் இவை அத்தனையையும்-பொய் மாயை—மித்தை—என்று பெரிய பொய்யாக ஒன்றை அவிழ்த்துவிட்டார்கள். அது மெய்யைவிட அழகாகச் சில பேருக்குத் தோன்றியது.

இப்படியே பொய்யின் பெருமையை எண்ணிக்கொண்டிருந்தால் இந்தக் கட்டுரையே பொய்யாகிவிடுமோ என்ற அச்சம் உண்டாகின்றது. இது மெய்யாக இருந்க எண்ணுகின்றேன் — அதனுல் இனிமேல் பொய்யைப்பற்றி பொய்யாகவும் எண்ணப்போவதில்லே-எழுதவும் போவது இல்லே.

பொய்யைப்பற்றி எண்ணவும் எழுதவும் கூடாது என்று. தீர்மானித்தவுடன் மெய்யைப்பற்றி எண்ணினுல் என்ன எழுதினுல் என்ன என்று நினைத்தேன். பொய்யைப்போல் அவ்வளவு அழகான உருவம் இதற்குக் கிடைக்குமா என்ற ஐயம் எனக்கு மெய்யாகவே உண்டாயிற்று, ஆமாம் மெய்யைப்பற்றிப் பெருமை சொல்ல என்ன இருக்கிறது?

மெய்யே பேசியவர்கள் தொல்லேப்படாமல் இருந்ததாகக் கதை கூடக் காணேம்—காக்கா காக்கா அழகான நீ நன்ருகப் பாடுவாயாமே' என்று பொய்யாகக் கேட்ட நரிக்குத்தான் வடை கிடைத்தது. 'அந்த வடையைக் கீழே போடு' என்று அந்தக் கதையில்வரும் நரி கேட்டிருந்தால் காக்கா வடையைப் போட்டிருக்குமா?

நரித்தான் போகட்டும்—நம் வீட்டுப் புரோகிதர்-'இதெல்லாம் சுத்தத் தப்பு ஐயா—நானுவது இதை மேலுலகத்துக்கு அனுப்பவாவது—எப்படி ஐயா முடியும்—எல்லாம் எனக்குத்தான் போடு இன்னும் இரண்டுபடி அரிசி' என்ருல் நாம் போடுவோமா? போஐயா—என்று விரட்டி விடுவோம்.

இல்லே சோதிடர்தானகட்டும்—எனக்கென்ன ஐயா தெரியும் வருங்காலமும் போன காலமும்—ஏதோ நானகு சொல்வது ஒன்று பட்டால் பார்த்துக்கொள்ளுங்கள் என்ருல் யார் சோதிடருக்குக் காணிக்கை முடிச்சு அவிழ்க்கப் போகிருர்கள்?

கோயில் பூசாரி—இதெல்லாம் என்ன அம்மா—இங்கே வெறும் கல்லுதான் இருக்கிறது நான் தான் தினமும் பார்க்கிறேன்—சாமியாவது வரமாவது தருவதாவது—வீட்டுக்குப்போ அம்மா—என்று மெய்யே பேசிவிட்டால் வாயும் வயிறும் என்ன ஆவது?

இதைப்போலவே தான் எந்தத் துறையிலும் மெய் என்பதற்கு மெய்யான இடம் இல்லே-அதனுல் நானும் அதற்கு இந்தக் கட்டுரையில் இடம் தரப்போவது இல்லே!

பொய்யே நீ வாழி! புகழ்மிக்கு வாழி! என்று அந்தப் பொய்யை வாழ்த்துகிறேன்-"மெய்யாகவா?" என்று கேட்டுவிடாதீர்கள்!!

★

சிக்கனச் சிந்து!!

"காங்கிரஸ் சர்க்கார் கண்டபடியெல்லாம் பணத்தை விரயம் செய்வதாகக் கதறினீர்களே, மாந்தர்காள்! இனி என்ன கூறுவீர்? இதோ, நேரு பிறப்பித்து விட்டார் தாக்கீது! எல்லா இலாகாக்களும், சிக்கனம் செய்துகொள்வதில் முனைந்து விட்டன—ராசேந்திரபிரசாத் சம்பளக் குறைப்பு செய்துகொண்டார்—டாக்டர் ராதாகிருஷ்ணனும் அப்படியே—எங்கும் இதுபற்றியே பேச்சு! தினசரி ஏடுகளையெடுங்கள், சிக்கனச் செய்தி இல்லாமலில்லை; என்ன இருந்தாலும், இது பொதுஜன சர்க்காரன்றோ? பொறுக்குமோ, மக்கள் கண்டனத்தை!" என்று துந்துபி முழங்குவோர் துதி பாடட்டும், அது கேட்கும் மக்கள் கொஞ்சமாவது திருப்தி அடையட்டும் எனும் கருத்திலோ, என்னவோ கடந்த சில நாட்களாகச் சேதிகள் வருகின்றன. காங்கிரசார் ஆட்சிப் பீடம் ஏறிய இந்தப் பத்தாண்டுக் காலத்தில், கரியான வரிப்பணம் பற்றி, எழுதி மாளாது! ஒவ்வொராண்டும் இன்னின்ன இலாகாவில் இப்படியிப்படி ஊழல் என்று வந்த செய்திகள் கொஞ்சநஞ்சமல்ல! இவைகளுக்கெல்லாம் ஒரு சமாதி கட்டி, வீணுக அழியும் பணத்தைத் தடுத்து, நாட்டுக்கான நன்மைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று நாட்டவர் கருதுகின்றனர்.

ஏன், கொள்ளைச் சம்பளம்
எதற்காக ஒரு கவர்னர்
இவர்களுக்கு ஏன் ஆடம்பரம்
ஐயாயிரம் பத்தாயிரம் என்று
ஏன் செலவுக்குப் பணம்

என்று வெள்ளைக்காரன் காலத்தில் கேட்டவர்கள் காங்கிரஸ்காரர்கள்! ஆனல், இவர்கள் ஆட்சிக்கு வந்ததும என்ன நடந்தது? வீண் செலவுகள் குறையவில்லை! ஒவ்வொரு நாட்டுக்கும் தூதுக்குழுக்கள் என்ற பெயரால், ஏராளமான பணம் செலவாகிறது! கவர்னருக்கும், ஜனாதிபதிக்கும் தரப்படும் சம்பளமும், ஐபர்தஸ்துச் செலவும் கொஞ்சமல்ல, கொஞ்சமல்ல. இந்தக் குறைகளைக்கூறி, நாடு கண்டித்தபோதெல்லாம். வக்கீலானர் நேரு—வாதாடினர்—குறைந்த சம்பளத்தில் எப்படி முடியும் என்ருர்—குதிரைப்படை பவனியும் யானைப்படை அழகும் ஜனாதிபதிக்குத் தேவை தான் என்ருர்—அப்படிச் சொன்னவர் இப்போது, நாட்டின் நாடி, தான் கூறிய பதில்களையும் துச்சமெனக் கருதுகின்ற அளவுக்கு வந்திருக்கிறதெனக் கண்டதும், "அதிர்ச்சி வைத்தியம்" செய்ய முனைந்திருக்கிருர். அதன் பலனுக, அவர் இவ்வளவு குறைத்துக்கொண்டார், இந்த இலாகாவில் இப்படியிப்படி சிக்கனம் என்று சேதிகள் வருகின்றன.

அந்தச் சேதிகளைப் பார்த்து சிரிப்பதா, அழுவதா என்று நமக்கு விளங்கவில்லை.

ஏன் இராணுவத்துக்கு 200-கோடி?

கேட்கிருேம்! அதில் குறைக்கவில்லை—மாருக 50-கோடி ஏறியிருக்கிறது, இந்த ஆண்டு.

ஏன் கவர்னர்? அவருக்கு ஆண்டுக்கு பத்துலட்சம்!!

கேட்கிருேம்—பதிலில்லை —பத்து லட்சம் செலவில், எவ்வளவு வெட்டு, என்றும் தீர்மானமாகத் தெரியவில்லை.

ஏன் இத்தனை வெளிநாட்டுத் தூதர்கள்? அவர்களுக்கேன் சம்பளம்?

கேட்கிருேம்! அதற்குத் தக்க பதிலில்லை—அங்கும் ஏதாவது சிக்கனம் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனல், சிக்கனம் என்கிறபேரால், இப்படி வருகின்றன செய்திகள்.

ஏ! மந்திரிகளே, அதிக நேரம் 'லைட்' எரிக்காதீர்கள். ஏனெனில், பணம் செலவாகும்!

காகிதங்களை அதிகம் உபயோகிக்காதீர்கள்—பணம் செலவாகும்!

எப்படிச் சிக்கனம்? மேலே கொள்ளைபோகும் வழிகள் மூடப்படவில்லை! இவைகளுக்குச் சிக்கன உபதேசம் செய்ய வந்துவிட்டார்கள்!

கார்களில், சர்க்கார் கொடிபறக்க வேண்டாம். தனி இரயில் வசதி, கேட்காதீர்கள்.

இதுவும், சிக்கனச் சிந்தில் ஒரு பகுதி! கொடி பறந்தால், ஆடம்பரம் விளங்கிவிடுகிறதாம்—காங்கிரஸ் அமைச்சர்கள் ஆடம்பரமாகயிருக்கக் கூடாதாம் — அதனல் இந்த உத்தர்வுகளாம்!

இதுபோன்ற உத்தரவுகளால் ஏதோ கோடிக்கணக்கில் மிச்சப்படும்போலிருக்கிறது. அதனல் தான், இதில் இவ்வளவு சிரத்தைக் காட்டுகின்றனர், என்று எண்ணினேம். டில்லியிருந்து சேதி வருகிறது,

இதுபோன்ற நடவடிக்கைகளால் இரண்டே இரண்டு கோடி ரூபாய் மீதப்படுமாம்.

இதற்கேன், இவ்வளவு அபரிமிதமான விளம்பரம் தரப்பட வேண்டும்? இரண்டே இரண்டு கோடி ரூபாய்! இராணுவத்துக்காக 250-கோடி அழிப்பதில் ஒரு 50-கோடியைக் குறைத்துக்கொள்வதாகச் சொன்னலாவது பொருளிருக்கிறது. அதைவிட்டு,

கோடி
லேட்
பேப்பர்

இவைகளில் சிக்கனம் பிடிக்கச் சொல்லுவதும், இதைப் பெரிது பண்ணுவதும் என்றால் என்ன பொருள்? ஏதோ, மக்கள் தம் கண்ணுக்கு மைதடவி, வேடிக்கை காட்ட நினைக்கிறார்கள் என்பது தவிர வேறென்ன!!

இதோ, ஒரு கட்டுரையின் சில பகுதிகள் — "சுதேசமித்திரன்" இதழின் டில்லி விசேஷ நிருபர், அனுப்பியதாகும். சுதேசமித்திரன், எதிர்க்கட்சி ஏடல்ல! எனினும், இவர்களின் சிக்கனச் சிந்து குறித்து, எழுதுவதைப் படியுங்கள்!

* * *

மத்திய மந்திரியாலயங்கள் ஒவ்வொன்றிலும் சிக்கனக் கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், அவற்றுக்குத் திட்டமான கட்டளையேதும் கிடையாது. நிச்சயமாக சிக்கனம் காட்டக்கூடிய ஆட்குறைப்பு பற்றி பேச்சு மூச்சே இல்லை. அதற்குப் பதிலாக மத்திய சர்க்கார் காரியாலயமோ நாளொரு அதிகாரியும் பொழுதொரு சிப்பந்தியுமாகப் பெருகி வருகிறது. கடந்த பத்தாண்டில் இவர்கள் தொகை இரட்டித்திருக்கிறது.

*

சுதந்திரோதயத்துக்கு முன்பு காரியதரிசிகளும் சுமார் 100 இதர அதிகாரிகளும் இருந்த இடத்தில் இன்று 37 காரியதரிசிகளும், 110 கூட்டுக் காரியதரிசிகளும் 250 உதவிக் காரியதரிசிகளும் எண்ணிலடங்காமற்ற அதிகாரிகளும் இருக்கின்றனர். இவர்களும் மற்ற சிப்பந்திகளுமாகச் சேர்ந்து, ராணுவம் தவிர்த்த ஏனைய செல்வுகளில் 40 சதவிகிதத்துக்கு மேல் விழுங்கி விடுகிறார்கள்.

*

அதிகாரிகள் ஏகமாக அதிகரித்திருப்பினும் திறமை கூடியிருக்கிறதா என்றால் அதுவுமில்லை. இன்றைய உதவிகாரியதரிசிகளைவிட அன்றைய சூபரிண்டெண்டுகள் எவ்வளவோ மேல்.

*

பிரிவினைக்கு முந்திய இந்தியாவிலிருந்த ரயில்வேக்கள் பூராவும் ஒரு பிரதம கமிஷனர், மூன்று மெம்பர் கொண்ட ரயில்வே போர்டினாலேயே நிர்வகிக்கப் பட்டு வந்தது. பிரதம கமிஷனர் பதவியை காலஞ் சென்ற கோபாலசாமி அய்யங்கார் ரத்து செய்து, போர்டு மெம்பர்களை நால்வராக்கினார். பிறகு இவர்கள் தொகை ஐந்தாக உயர்ந்தது. சென்ற வருடமோ ஐந்தாண்டுத்திட்ட அமுலையொட்டி மேற்கொண்டு ஐந்து கூடுதல் மெம்பர்கள் நியமிக்கப் பட்டனர். இவர்கள் தவிர ஒரு ஆலோசகரும் உண்டு. பிரிவினைக்குப் பிறகு இந்திய ரயில்வேக்கள் அப்படியொன்றும் விஸ்தரித்து விடாதிருக்க, இந்த அதிகப்படி அதிகாரிகள் ஏன் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்!

*

...கடிதங்களில் ஒன்றுக்கு இரண்டாக கையெழுத்துப் போடுவதோடு சரி. இம்மாதிரி வேலை வெட்டி ஏதுமில்லாதது அவர்களுக்கே தர்ம சங்கடமாக இருக்கிறதாம்! அனாவசியமான இந்த ஐந்து பதவிகளையும் ஆலோசகர் பதவியையும் ஒழித்தாலும் போதும், ஆண்டுக்கு ரூ. 2 லட்சம் வரையில் மீதப்படும். மத்திய மந்திரிகள் சம்பள வெட்டினால் மிச்சமாவதைவிட இது அதிகமென்பது கவனிககத்தகுந்தது.

*

ரயில்வேக்களில் மற்றும் பல குறைபாடுகளும் நிறைந்திருக்கின்றன. அவற்றுக்கெனத் தனியாக போலீஸ் பிரிவு இருப்பதுடன் திருட்டைத் தவிர்க்க காவல் படையும், லஞ்ச ஊழல்களைக் கண்டுபிடிக்க உஷார் பிரிவும் உள்ளன. காவல் படைக்கு வருஷம் ரூ 3 கோடி வரையில் செலவாகிறது. ஆனால் திருட்டுக் கேசுகள் எண்ணிக்கையோ 1954-55ல் 4,43,000 ஆக இருந்தது 55-56ல் 5,08,000 ஆக உயர்ந்து விட்டது. உஷார் பிரிவு இருந்தும் ஒன்றுதான், இல்லாமலிருந்தாலும் ஒன்றுதான். யாராவது சிறிய சிப்பந்தி சிக்கிக்கொண்டால் தான் சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உயர் அதிகாரிகள் குறித்துக் குற்றச்சாட்டானால், தஸ்தாவேஜுகள் ஆமை வேகத்தில் நகருகின்றன. அவர்கள் ஓய்வுபெறுமளவு புதைந்து போய் விடுகின்றன.

*

...நாட்டின் ஆதார செல்வத்தைப் பெருக்கத்தக்க அடிப்படைத் தொழில்கள் அப்படியேயிருக்க, அவ்வளவாக அவசியமில்லாதவை அதிகமாக முன்னேறிவிட்டன... உதாரணமாக, சமீபத்தில் புதியதொரு கலங்கரைவிளக்கம் திறந்து வைக்கப்பட்டது. ஐந்தாறு கோடி ரூபாய் செலவில் இன்னும் நூறு தீபஸ்தம்பங்கள் நாட்டத் திட்டமிடப் பட்டுள்ளது. நூற்றாண்டுக் கணக்கில் இவையின்றியே, நீள்கடலோடிய நம் நாட்டவர்கள், இன்னும் சிறிது காலம் சமாளிக்க முடியாதா, என்ன? ஆயின் திட்டக் கமிஷன் அங்கீகரித்த பிறகு இவற்றை தவக்கப்படுத்தினால் வானம் இடிந்து விழுந்துவிடுமே!!

*

...இதைச் சொன்னால் போக்குவரத்து இலாகா நோப்பாளப்பட்டு, ஒலிபரப்பு இலாகாவை சுட்டிக்காட்டக்கூடும். ஐந்தாண்டுத் திட்டப்படி ஏராள வானொலி நிலையங்களைத் திறந்து 9 கோடி வரையில் அவ்விலாகா மட்டும் தீர்த்துக்கட்டலாமா என்று வினவும். இரண்டுமாகச் சேர்ந்து கொண்டு குடிசைத் தொழில் இலாகாவைச் சாடவும் சந்தர்ப்பமுண்டு. பலகோடி ரூபாய்களை கதர், அம்பர் சர்க்கார் அபிவிருத்திக்கு அது கொட்டியழலாமா என்று வினவக்கூடும்.

*

...இந்தக் கதர் அபிவிருத்தி குறித்து ஒரு ருசிகரத் தகவல்: 1953-54ல் 38000 ஆகயிருந்த 'வஸ்திரஸ் வலம்பி'கள் 56-57ல் 5,87,000 ஆகப் பெருக்கி விட்டார்களாம். (வஸ்திரஸ் வலம்பி என்றதும் என்னவோ ஏதோ என்று மிரளாதீர்கள். தாமே நூற்று நெய்து ஆடை உடுத்துவோருக்குத்தான் இந்தத் திருநாமம்!) தாங்கள் நூற்று நெய்து தாமே பூணும் இவர்களுக்கு சென்ற வருடம் ரூ 50 லட்சம் மான்யம் அளிக்கப் பட்டுள்ளது.!!

* * *

வீண் செலவுகள் நடக்கும் விதம்— குறித்து சுதேசமித்திரன் டில்லி நிருபர், இப்படி எழுதுகிறார்! இவைகளில் எந்தவித சிக்கனமும் செய்யப்படப்போவதாகத் தெரிய

வில்லை, பூசணிக்காய் தெரியவில்லை! கடுகு, பெரிதாகப் படுகிறது!

இதோ ஒருபுள்ளிவிபரம்-இந்து ஏட்டில், ஒருவர் கடிதமாகத் தீட்டியிருக்கிறார். இதையும் படியுங்கள். எப்படி, இந்தப் பத்தாண்டுக் காலத்தில் நமது பணம் விரயமாகி வருகிறது, என்பதை விளக்கும் அக்கடிதம்.

ஐயா,

கீழுள்ள அட்டவணை இந்தப் பத்தாண்டுகளில், வருமான வரி (கார்ப்பரேஷன் வரி உள்பட) வசூலிக்கப்பட்டதையும், அந்த வசூலுக்கான செலவையும் காட்டுவதாகும். மாநிலத்தின் பங்கு தவிர்த்த விபரம் இது:

ஆண்டு	வரி	வசூலிக்க செலவு
1946—47	1,30,72 லட்.	152 லட்.
1947—48	78,11	95
1948—49	1,39,98	182
1949—50	1,15,37	201
1950—51	1,25 71	244
1951—52	1,34,74	270
1952—53	1,28 25	304
1953—54	1,07,08	324
1954—55	1,06,64	345
1955—56	1,13,24	381
1957—58	1,36,46	460

(பட்ஜட்)

இந்த அறிக்கையின்படி வசூலிக்கப்பட்ட தொகையில் மாறுதல் அதிகம் இல்லையென்றாலும், வசூலுக்காகும் செலவு மட்டும் சுமார் மூன்று மடங்கு உயர்ந்திருப்பது விளங்கும். இது நிதிமந்திரியின் தொடர்பிலுள்ள நிர்வாக இலாகாவைச் சேர்ந்ததாகும். நிதி இலாகாவாலேயே கண்காணிக்க இயலவில்லையென்றால் ஏனைய இலாகாக்களில் செலவாவதைப்பற்றி என்ன ஆச்சரியம்?

"கவலையுள்ள ஒருவர்"

* * *

இப்படியிருக்கிறது, நிலை! இந்த நிதிமந்திரிதான், பணம் போதவில்லையென்று கூறி, வரிமேல் வரி போடுகிறார்!

இப்படி, எத்தனையோ விதங்களில், நமது பணம் கரியாகிறது. இவைகளை யெல்லாம் கண்டுபிடித்து குறைக்கச் சொன்னால், 'அதிர்ச்சி வைத்தியத்தில்' ஈடுபடுகிறார்கள். அதன் மூலம் மக்களின் எரிச்சலைக் குறைக்கலாமெனவும் கருதுகிறார்கள். என்ன விந்தை! என்ன துணிவு!!

★

தலைமைக் கழகம் — அறிக்கை

ஜூலை-7 ஞாயிறு

—:—

பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும். **7-7-57 ஞாயிற்றுக்கிழமை**யைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள தோழர்கள் அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாடுடன், அமைதி குலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன்கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21—6—'57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

4-பக்கத் தொடர்ச்சி

தது முதல் எதிர்க்கிறவரல்லவா சுந்தரலிங்கம்? அதனால் சிங்களவர்களில் பலர் கல்லை விட்டெறிந்து தாக்கினர் அவரை...பயந்த போலீசார் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோயினர். அங்கிருந்து வீட்டுக்குப் போக மறுத்தார். எத்தனை நாளைக்குத்தான போலீசார் சாப்பாடு போடுவார்கள்? அதிலும் அவர் கைதியல்லவே! சாப்பாட்டுக்கும் அவர் பணம் கொடுக்க மறுத்து விட்டார்... ஆகவே இரவோடு இரவாக அவரை அவர் வீட்டுக கதவருகில் கொண்டுபோய் போலீசார் விட்டனர்.

விடவில்லை, அப்போதும் அவர். 'ஜீப்'பில் உட்காருவதற்காக ஓடி வந்தார்! போலீசார் 'ஜீப'பை விட்டுககொண்டு கிளம்பவே அவரால் பிடிக்க முடியவில்லை... உடனே நடு ரோட்டில் முன்போல உட்கார்ந்து கொண்டார்...அது தான் நீ இப்போது பார்ப்பது",

நான் பார்த்துக் கொண்டேயிருந்த சமயத்தில் கல்லெறி ஆரம்பமாயிற்று! சுந்தரலிங்கம அஞ்சவில்லை...போய் போலீஸ் ஸ்டேஷனில் சொல்லும்படி கூடியிருந்தவர்களை வேண்டினார்... கலாட்டா ஆரம்பமாயிற்று...அப்போது யாரோ ஒருவர் ஆகாயத்தைப் பாாத்துச் சுடவே கூட்டம் கலையலாயிற்று... ...இருந்தாலும் ஒளிந்து நின்று பலர் கல் வீசினர். இதைக்கண்ட சுந்தரலிங்கத்தின் சொந்தக்காரர்கள் வந்து அவரைப் பலவந்தமாகத் தூக்கி பக்கத்திலேயிருந்த அவருடைய சகோதரர் நாகலிங்கம (முன்னாள் தற்காலிக பிரதம நீதிபதியாக இருந்தவர்) வீட்டுக்குக் கொண்டு போயினர். எனக்கு நேரமாகி விட்டதால், அங்கிருந்து கிளம்பினேன்.

*

இன்னொரு இடத்திலும் ஒரே கலாட்டாவாகயிருந்தது! ஒரு ஆயிரம் பேர் இருக்கும்—**போகாதே! நில்! விடமுடியாது!**— என்று இந்தியிலும் ஆங்கிலத்திலும் கத்திக் கொண்டிருந்தனர். நடுவில் **டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்** தென்பட்டார். அவர் முகம் ஆத்திரமயமாயிருந்தது! "நிதி மந்திரியான அவர் புதுவரி போட்டதன் பலனை அனுபவிக்கிறாரோ" என்று எண்ணிக்கொண்டே போனேன். பம்பாய் நகரம்! அங்கேயுள்ள வருமான வரி அலுவலகத்தில்தான் இந்த அலங்கோலம்!! டி. டி. கேயின டிரைவரைப் பிடித்து இப்படியும் அப்படியும் தளளினார்கள். அவருடைய காரியதரிசியையும் கூட்டத்தினர் விடவில்லை.

"என்ன விஷயம்?" என்று விசாரித்தேன். டி. டி. கே.யை இந்தப் பாடுபடுத்தியது வருமான வரி ஆபீசில் வேலை பார்க்கும் ஊழியர்களாம்! ஆபீசுக்குப் பார்வையிட வந்த அவரைச் சந்தித்து தங்கள் குறைகளை சொல்ல விருமபினார்களாம். அவர் மந்திரியலலவா? அதனால், "இது என் புரோகிராமில் கிடையாது. இப்போது நேரமில்லை...", எனறு சொல்லிவிட்டு கார் ஏறப் போன போதுதான இந்தக் கதி!! டி. டி. கேயைப பார்த்தேன். அங்கே நின்ற ஏதோ ஒரு காரில் ஏறிக் கொண்டு பறக்கவே, நானும் அதில் தொத்திக்கொண்டேன்.

*

களைப்போடு இருப்பிடம் சேர்ந்த டி. டி. கேக்கு எனனைக் கண்டதும இன்னும் சந்தேகம் அதிகமாயிற்று! அதட்டும குரலில் "போகப்போகிறாயா இல்லையா?", என்றார்.

"போகிறேன் சாமி! ஒரே ஒரு விஷயம்..."

"சொல்...புது வரிகளைப்பற்றிப் பேசுவதானால் போ...", என்றார்.

"வரிகளைப் பற்றியல்ல! திட்டக் கமிஷன் சம்பந்தமாக...". என்றதும் டில்லிக்குப்போய் அவர்களைக் கேள் என்று விரட்டவே, கிளமபினேன்!

* * *

"சார்! முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அடைந்த 'முன்னேற்றம்' பற்றி நீங்கள் விடுத்த அறிக்கையைப பார்த்தேன். ஒரு சந்தேகம்...", என்று திட்டக் கமிஷன் உப தலைவர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியைப் பார்த்துக்கேட்டேன்.

"அதெல்லாம் முடியாது! விளக்க நேரமில்லை..." என்றார்.

"டி. டி. கே. தான் உங்களிடம் அனுப்பினார்!"

"அவரையாரய்யா நிதிமந்திரியா இருக்கச் சொன்னது? ஒரே தொல்லை!" என்று முணகிக் கொண்டே, 'சொல்லு!" என்றார்.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசீய வருமானம உயர்ந்திருக்கிறது என்று வெளியிட்டிருக்கிறீர்கள் அல்லவா?"

"ஆமாம்! 17·5— உயர்ந்திருக்கிறது..."

"சராசரி ஒவ்வொருவர் வருமானம்..."

"10·5—உயர்ந்திருக்கிறது..."

"......ஆனால் அதற்கேற்றபடி மத்திய தர மக்களின் வாழ்க்கையிலும், ஏழைமக்களின் வாழ்க்கையிலும் எந்தவித மாறுதலும் தெரியவில்லையே! வருமானம் உயர்ந்தது என்றால் வாழ்க்கைத்தரம் உயரவேண்டாமோ? இங்கேதான் அரிசிக்கே ததிங்கிணதோம் போடுகிறோமே. ஏன?"

"உண்மைதான் நீ சொல்வது வாழ்க்கைத்தரம் உயரவில்லைதான். அதற்கு என்ன காரணம் தெரியுமோ?"

"சொல்லுங்கள் தெரிந்து கொள்ளுகிறேன்."

"விலைவாசிகள் உயர்ந்துவிட்டன— அதனால் பொருள்களை அதிக விலைகொடுத்து மக்கள் வாங்க நேருகிறது. அதனால்தான் வாழ்க்கைத்தரம் உயரவில்லை..."

"அதாவது குடத்தில் தண்ணீரும் கொட்டினோம்—கீழே, பொத்தலும் செய்துவிட்டோம், என்கிறீர்கள் அபபடித்தானே?"

"நீ எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள். இதுதான காரணம்" என்றார்.

"இது என்ன! **வாழ்க்கைத்தரம்** உயர்ந்து மக்கள் கவலையில்லாமல் வாழத்தானே, திட்டம்போடுவதாகச் சொன்னீர்கள். கடைசியில் இப்படி...!!"

வயோதிகரான அவர்' நாற்காலியில் சாய்ந்தார்—இப்படியெல்லாம் துருவித்துருவிக் கேட்பாய் என்பதால்தான் போகச் சொன்னேன்-போகிறாயா, இல்லை 'சர்ராசியை'க் கூப்பிடவா, என்றார்! நாமும், 'சுந்தரலிங்கம் ஆவோமா?" என்று ஒரு நினைவு வந்தது—உடனே, சுந்தரலிங்கம் பற்றி நினைவூட்டிய ஆசிரியரின் கவனம் வந்தது—அவருடைய ஆத்திரத்துக்கு இரையாகவேண்டாம் என்று அங்கிருந்து கிளம்பினேன்!! ★

யானையல்ல, பூனை!!

மரத்தைப்போலிருக்கும் கால், முறத்தைப்போலிருக்கும் காது, முதுகு இவ்வளவு பெரிதாகயிருக்கும், எட்டிப் பிடிக்க யாராலும் இயலாது, இது சாதாரணமான யானை யல்ல! எவருக்கும் கிடைக்காத யானை, எங்கள் காங்கிரஸ் கட்சியால் மட்டுமே கொண்டுவரக் கூடிய யானை, காணத் தயாராயிருங்கள், அதன் துதிக்கை இப்படியிப்படியிருக்கும், அது வளையும் போது இப்படியிப்படியிருக்கும், அசைந்து நடைபோடும் போது ஏற்படும் அழகே அழகு. அபிசீனிய மன்னர் கண்டு களித்தார், ஆப்கன் அரசரும் பாராட்டினார், அட்லி மாலைபோட்டார், அமெரிக்கர் வியந்தபடி உள்ளனர், புல்கானினும் குருஷேவுமோ 'காணக் கண்கோடி' வேண்டும் என்றனர். இதற்குத் தீனிபோடுவதற்காக உள்ளூர் காடு போதாமல் வெளியூரில்கூட குத்தகைக்கு எடுக்கப்போகிறோம் — விரைவில் வரப்போகிறது காணத் தயாராயிருங்கள் என்று ஏடுகளில் மட்டுமல்ல—நாடகம் போட்டுச் சொல்லினர்—சினிமா எடுத்துக் காட்டினர்—ஊருக்கு ஊர் போய்ப் பிரச்சாரம் செய்ய ஒரு அதிகாரியை நியமித்தனர்—அதற்குத் தீனி போட்ட வகையில் மட்டுமல்ல அதைப்பற்றி மக்களிடம் சொல்லவும் ரூபாய்களை அழித்தனர்! ஐந்து ஆண்டுகள் பிடித்தது—கடைசியில், வந்தது, யானை. எப்படி? கம்பீரமான உருவம் இல்லை, காது முறம்போலில்லை, காலோ கடுகுபோல, குரலோ 'மியாவ் மியாவ்' எனக் கேட்கிறது. இத்தனை நாள் யானை வரப்போகிறது என்று அட்டகாசம் செய்தவர்களுக்கு எப்படியிருக்கும்? அந்த அச்சமும் துக்கமும் பிடித்தாட்டுகிறதாம், டில்லியை! எழுதுகிறார், 'மெயில்' நிருபர்!

பயப்படுகிறார்களாம்—மக்களிடம் இதைப்போய்க் காட்டினால் என்ன நினைப்பார்கள் என்று அஞ்சுகிறார்களாம்—இந்த விபரங்கள் பரபரப்பை உண்டு பண்ணுமே என்று துக்கம் அடைகிறார்களாம்.

யானை .. அளவுக்கு இருக்கும் என்று சொன்னோமே, கடைசியில் இப்படியாகிவிட்டதே என்று கலங்குகிறார்களாம்! "Feared in Delhi"— என்று தீட்டுகிறார், மெயில் நிருபர்! முக்காடிட்டு மூலையில் போய் உட்கார்ந்து விசனிக்கிற அளவுக்கு வேதனையைத் தருவதாக உள்ளதாம், **முதலாவது ஐந்தாண்டுத் திட்டம்** பற்றிய கணக்கெடுப்புகள்! யானையைக் காட்டுவதாகச் சொன்னோம், கடைசியில் பூனையாகிவிட்டதே என்று சோகமும் துக்கமும் அடைகிறார்களாம்!

இந்தப் பூனையைக் கொண்டு போய், 'இதோ யானை' என்று காட்ட முடியுமா — என்ன நினைப்பார்கள் மக்கள் — எவ்வளவு ஆசைகளைத் தூண்டினோம் அவர்களுக்கு—கடைசியில் இப்படியிருக்கிறதே—என்ன செய்யலாம் என்று இரண்டு வாரங்களாக யோசனையிலாழ்ந்துயிருக்கிறதாம் டில்லி பட்டாரம்!

பெற்றோம் வெற்றி— சாதனைகளின் பட்டியல் இதோ — எமது சாமர்த்தியத்தின் அளவினைப் பாரீர்—2000 கோடி ரூபாய் செலவழித்தோம், எனினும் என்ன! எங்கள் வெற்றிப் பட்டியலின் முன் அத்தொகை மிகமிகச் சாதாரணம்! — என்று குதூகலமும் கொண்டாட்டமும் கலக்க, விபரம் தரவேண்டியவர்கள் வேதனைப்படுகிறார்களாம். விழாக்கள் கொண்டாடி, ஆனந்த கீதமும், அற்புத விளக்கங்களும் தரவேண்டியவர்கள், அங்கலாய்ப்பும் 'ஐயோ!' எனகிற ஏக்கமும் அடைகிறார்களாம்!

Startling disclosures about the expenditure—என்று குறிப்பிடுகிறார் மெயில் நிருபர். எப்படியெப்படி செலவானது, என்பது பற்றிய விபரங்கள், திகைப்பூட்டுமாம்! அதனால், பயப்படுகிறார்களாம் — என்ன நினைப்பரோ மக்கள் என்று வேதனையும் வெட்கமும் அடைகிறார்களாம்!

திட்டக்கமிஷன், தன்னுடைய முதல் ஐந்தாண்டுச் சாதனைகள் பற்றிய விபரங்களைத் தயாரித்துத் தர முன்வந்துள்ளது. அதிலிருக்கிற விபரங்களைக்கண்டு, மக்கள் அதிருப்தி அடைவார்களே, யானைவரும் என நினைத்தோம் கடைசியில் பூனையாகயிருக்கிறதே என்று எரிச்சலடைவார்களே, என்ன செய்வது என்று கலக்கமடைகிறார்களாம்! ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியவர்கள்—இன்னொரு ஐந்தாண்டுத் திட்டத்தை, நகர்த்திக்கொண்டிருப்பவர்கள் — எவ்வளவு ஆனந்தம் அடையவேண்டும்? அதற்குப் பதிலாகப் பயமும் சோகமும் அடைகின்றனராம் டில்லியினர்! ஏனெனில் யானையெனக் கூறியது, பூனையாகத் தெரிவது, அவர்களுக்கே விளங்குகிறது — நாம் செய்த ஆர்ப்பாட்டமும் அட்டகாசமும் இப்படியாகிவிட்டதே—அகில உலகமும் நமது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போற்றுவதாகக் கூறினோமே—ஆனால் கடை

சியில் இப்படி ஏமாற்றமும் திறமையின்மையுமாகத் தெரிகின்றதே இந்தப் பட்டியல்! என்ன நினைப்பார்கள் மக்கள்? எவ்வளவு ஆத்திரமடைவார்கள்! இந்த விபரங்கள், நம்மைப்பற்றி எவ்வளவு கேவலமாக்கிவிடும் என்று அஞ்சுகிறார்களாம்—வெட்கமும் வேதனையும் அடைகிறார்களாம்!!

"இந்தியா ஒரு ஐந்தாண்டுத்திட்டம் போட்டு நடத்தி வருகிறது. இப்படி ஐந்தாண்டுத் திட்டம்போடுவது, கம்யூனிஸ்டு நாடுகளில்தான் பழக்கம். ஆனால் இந்தியாவும் போடுகிறது. சீனாவும், ஐந்தாண்டுத் திட்டம்போட்டு நடத்தி வருகிறது. சீனாவைப்போல் இந்தியா கம்யூனிஸ்டு நாடல்ல. ஆகவேதான், இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக அக்கரை இருக்கிறது மேற்கு நாடுகளுக்கு! எப்படி நடத்தப்படுகிறது என்பதில் நாம் ஆர்வம் காட்டுகிறோம்" என்று இலண்டன் ஏடான 'பைனான்ஷியல்டைம்ஸ்' அண்மையில் தீட்டியிருக்கிறது! இதனால், இந்தியாவுக்கு வேண்டிய ஒத்தாசைகளையும் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறது.

நேரு அவர்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பணம் கேட்கும் நோக்கத்துடனேயே இலண்டனுக்குப் போயிருப்பதாகக் கூறப்படுகிறது —நிதியமைச்சர் டி. டி. கே. யும் தேவைப்படுகிற ரூ-6000 கோடிக்கு வெளி நாடுகளின் உதவியையும் எதிர்பார்க்கிறோம என்கிறார். இப்படி, மேலை நாடுகள் யாவும் ஆர்வத்தோடு கவனிக்கவும், அவைகளின் உதவியைப்பெற நாம் ஆவலை வளர்த்துக்கொண்டிருக்கும் நிலைமையிலுா, இந்த ஐந்தாண்டுத் திட்ட பலாபலன் வெளியானால் எப்படியிருக்கும்? யானையல்லப்பா பூனையாம, என்று அவர்கள் எல்லாம அறிந்தால் என்ன கருதுவார்கள!!

யானை பூனையாகிவிட்டது—இதனை, உணவுற்பத்தித் திட்ட தோல்வியே எடுத்துச்சொல்லிற்று. எதெது உயர்ந்துவிட்டது என்று டில்லியினர் சொன்னார்களோ அவையெல்லாம் வீணுரைகள் எனபதையும் நாடு தெரிந்துகொண்டிருக்கிறது—காங்கிரஸ்காரர்கள வானளாவப் போற்றிய ஐந்தாண்டுத்திட்டம், ஒரு தோல்வி என்பதில், எவருக்கும் இப்போது ஐயம் கிடையாது.

இந்த உண்மையை இப்போது, திட்டம்போட்டவர்களே, தெரிந்துகொண்டுவிட்டார்கள்—கணக்குப் போட்டுப் பார்க்கும்போது தமது தோல்வி தெரிகிறது, யானையல்ல பூனை என்பது விளங்குகிறது—ஆதலால், பயமும் துக்கமும் அடைகின்றனராம்! இந்த விபரத்தையெப்படி வெளியிடுவது என்று சிந்தாகூலமும் திகைப்பும் அடைந்து கிடக்கின்றனராம்!!

நாட்டிலுள்ள பொருளாதாரவளம் குறித்து, ஐந்தாண்டுத் திட்டம் வகுத்தவர்கள்,போதுமான அளவுகவனம் செலுத்தாமலே, வகுக்கப்பட்டதிட்டம் இது. ஆகவே, இது வெற்றியளிக்குமா. என்பதில் ஆரம்ப முதலே நாம் சந்தேகப்பட்டோம்.

ஆனால், சிறினர் காங்கிரஸ்காரர்கள்! ஏசினர்-இதுகளுக்கு என்ன தெரியும் என்றனர்—யானை என்றனர்—வரப்போகிறது பாரீர் என்றனர்—திட்டம மகத்தான சாதனைகளைச்செய்து வருகிறது, எடுத்து விளக்க ஆளில்லாததால்தான தெரியவில்லை என்றனர்—சினிமா பிடித்தனர்—பிரசசாரகர் வைத்தனர்—பாடகர்களைப பிடித்தனர்—நாடகம நடத்தச்சொல்லினர்—கடைசியில், இபபோது கணக்கெடுத்துப்பார்தது அவர்களே கலங்குகின்றனர்! இந்த விபரங்களைப படிததால், மககள ஆத்திரமடைவரேஎனறுஅஞ்சுகின்றனர்!

2000கோடி ரூபாய்-இதற்கெனச் செலவழிந்தது ஐந்து ஆண்டு—இதுபறறி பேசபபட்டது ஏராளம் —இதறகாக அமர்த்தப்பட்ட அதிகாரிகள் பலர்—வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்கள ஏராளம—கடைசியில் பலன், யானை பூனையாகிவிட்டது! ஏமாறறமும் துககமுமே பரிசாகத் தெரிகிறது!!

ஒருஅரசின்அலங்கோலத்துக்கு இதைவிடவுமா, சாட்சியம் வேண்டும்? நேரு அவர்களுக்கும், அவர் போன்றவர்களுக்கும, ஐந்தாண்டு திட்டத்திலுள்ள ஆர்வத்தை நாம் குறைத்து மதிப்பிடவில்லை—இப்படி வீணாக வேண்டும் என்பதறகாகவே 2000 கோடி ரூபாய்களை ஒதுக்கினர் என்றும் நாம் கூற மாட்டோம். அவ்வளவு தூரம், நாக்கில நரம்பற்றவர்களல்ல நாம! எனினும, அவர் காட்டிடும் ஆர்வத்துக்கும பலன் என்ன? கடைசியில் பூனைதானே! எவ்வளவு பெரிய ஏமாறறம் இது!!

திட்டம் தீட்டப்பட்ட நாள் முதல் ஒரு குறையினை நாம் சுட்டிக்காட்டி வருகிறோம். ஆலைகளும் சோலைகளும் பெருகட்டும-ஆனால், அங்கே உற்பத்தியாகும் பொருள்களும் சரியாக வினியோகிக்கப் படட்டும் என்பதுதான், அது.

இன்னும் இங்கு, உற்பத்திக்கும் அது விநியோகிக்கப்படுகிற முறைக்கும் இடையில் ஒரு திட்டம் வகுக்கப்படவில்லை.

அழகான பட்டாடை நெய்கிறான், நெசவாளி! ஆனால். முடித்துணிக்கு அலைகிறான், அவன். சம்பா விளைக்கிறான, விவசாயி! ஒருபிடிஅரிசிக்கு அல்லாடுகிறான். சிமெண்டு செய்கிறான்—அவன் இல்லமோ, வெறும மண் காடு. கான்பூர் செருப்பு தைக்கிறான்—அவனை காலிலோ பழம செருப்பும் கிடையாது. இப்படி, உறபத்திக்கும, அதை உபயோகிப்போருக்கும் இடையிலே சமன செய்யப்படாத படுகுழி உள்ளது! அதற்குக் காரணம், இப்போதுள்ள, சமூக அமைப்பு **முதலாளித்துவத்தை** அடிப்படையாகக் கொணடிருப்பதுதான்,

அதைத்தகர்ந்து எறிந்துவிட்டு, புது சமூகம் அமைக்கப்படும வரையில், எவ்வளவு நல்ல பட்டாக வாங்கினாலுமபெருச்சாளிகள் அறுத்து எரியவே செய்யும்—என்னதான் திட்டங்கள் போட்டாலும், பூனையாகத்தான் நேரும். இதை, ஆரம்ப முதல் சொல்லி வருகிறோம். ஏற்க யாரிக்கிறார்கள்? இவர்களுக்கு வேறு வேலையெனன, என்கிறார்கள்! இதோ, வெட்கமும் வேதனையும், விலாவிளைக் குத்துகிறது—**ஐந்து ஆண்டு** அறிக்கையினை வெளியிடவே, அஞ்சுகிறார்கள், 'ஐயோ, என்ன ஆகுமோ?', என்று கலங்குகிறார்கள்!!

உலகெங்கும் இப்படியொரு காட்சியினைக்காண இயலாது—எவ்வளவு பெரிய தோல்வி—இரண்டாயிரம் கோடி ரூபாய்—ஐந்து ஆண்டுகள்—அப்பப்ப, எண்ணவே, கண்ணீர் பிறக்கிறது, நமக்கு—ஒன்றா, இரண்டா, இரண்டாயிரம் கோடி! இதறகுப்பிறகு, கிடைக்கும் பரிசு ஏமாற்றமும, கலக்கமும்—யானையல்ல பூனை!!

★

பெயரில் உள்ள பெருமை

'தமிழ்நாடு' என நம் நாட்டுக்குச் சட்ட முறைப்படி பெயரிடுக என்றால், 'பெயரில் என்ன பெருமை?' வந்துவிட்டது என்று முணுமுணுக்கிறார்கள், இந்தியாவைப் 'பாரதம்' எனப் பெயர்மாற்றிப் பெருமை பூண்ட அரசியலார். இது நம் அரசியலாரிடையே காணப்படும்வியக்கத்தக்க முரண்பாடாகும்! இனியாவது ஊர்ப் பெயர்களையும், தெருப் பெயர்களையும்—சிதைத்து உருமாறிய முறையோடு வழங்காமல், பழம் வரலாற்றுக்கு உரிய முறையில் வழங்க அரசியலாரும் பொதுமக்களும் முற்பட வேண்டும்.

திருநெல்வேலி நகர்மன்றப் பொருட்காட்சிச் சாலையின் திறப்பு விழாவை நிகழ்த்துகையில் பேராசிரியர், டாக்டர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் அந்நகரிலுள்ள தெருக்களில் சங்ககாலப் பெயர்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று ஓர் ஆலோசனை கூறியிருக்கிறார், இது வரவேற்கத் தக்கதாகும். திருநெல்வேலியில் மட்டுமன்று; தமிழகத்திலுள்ள எல்லா ஊர்ப் பெயர்களையும், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, காஞ்சி, தஞ்சை போன்ற வரலாற்றுப் புகழுடைய ஊர்களின் தெருப் பெயர்களையும் ஆராய்ந்து பழைய முறைப்படி அப்பெயர்களைப் புதுப்பித்து வழங்க வேண்டும். இதற்கு வரலாற்றறிவும், தமிழறிவும் வாய்ந்த தமிழறிஞர்களை, தமிழாசிரியர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஊராட்சியாரும், மாநில ஆட்சியாரும், ஆங்காங்கே இத்துறையில் சிறிதேனும் கவனம் செலுத்த வேண்டும். புகை வண்டி வழிகள் நாடெங்கும் இருப்பதாலும் அஞ்சல் நிலையங்கள் அனைத்தூரிலும் இருப்பதாலும் இவற்றை நடாத்தும் மத்திய அரசினரும் ஒத்துழைத்தால்தான் ஊர்ப் பெயர் மாற்றங்கள், வெற்றியுறும்.

மாமல்லன் பாடுபட்டுச் சிற்பச் செல்வங்களைச் சேர்த்து வைத்துத் தன் பெயர் வழங்க வேண்டுமென்று (மாமல்லபுரம்) என பெயரிட்டான். நாம் அம்மன்னனுக்கு வேறெதுவும் கைமாறு செய்யாவிட்டாலும் அவன் பெயரைத்தாங்கிய ஊரைக்கூடவா அவன் பெயராலேயே வழங்கக் கூடாது? அவன் பெயரை விட்டுவிட்டு மஹாபலிபுரம் என உருச்சிதைப்பது எவ்வளவு அநீதி! சிந்தித்துப் பாருங்கள். நம் வடமொழி ஆர்வம் வடமொழியை வளர்க்க பயன்பட்டால் வரவேற்கலாம்; அது தமிழைச் சிதைக்கப் பயன்பட்டால் வரவேற்கலாமா? எண்ணிப் பாருங்கள். சென்னையிலுள்ள தியாகராய நகரும் ஒரு பெருமகனாரின் நினைவாகும். அதனை 'தியாகை' எனவும் சுருக்கி அழைக்காமல் 'தீ' நகர் என அழைப்பது எவ்வளவு கொடுமை? தீ நகரா? தீய நகரா? அல்லது நாம் வாழ்வதால் தீமை சேர்ந்த நகரா அது? என ஆராய்ந்து பாருங்கள்! இவ்வாறு, செந்தமிழ் நாடென்னும் போதினிலே தேன் பாயும் தமிழ் நாடு தன் பெயரையும் இழந்து தன் ஊர் தெருப்பெயர்களையும் இழந்து, உருச்சிதைந்து வாடுதல் முறையா? இது தமிழ் நாட்டிற்குக் கேடா, அதில் வாழும் மக்களுக்குக் கேடா, என ஆராய்ந்து செயல்படுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்!!

"வாரச் செய்தி"